பாரத மணி

சித்திரபானு ௵
தை ௴

விலை அணா 4

JANUARY
1943

முக்கிய விஷயங்கள்.

கா. சி. வேங்கடரமணி

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிக

என் கனவு

ராதாகிருஷ்ண சாஸ்திரி எம். ஏ.

கிராம வைத்தியரே வாத்தியார

மானால்

டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி

ஆகாரச் சீர்திருத்தம்

மு. அருணாசலம் எம். ஏ.

தும்பைப் பூ



THE BHARATA MANI, MAYAVARAM

EDITOR: K. S. VENKATARAMANI

"இந்த அழகிய ஸோப் உங்களுடைய
சரும பாதுகாப்பை கவனிக்கட்டும்"

என்று
ரதன் பாய்
சொல்கிருள்

ரதன்பாய் சொல்கிருள் "ஒவ்வொரு ஸ்திரீயும் லக்ஸ் டாய்லட் ஸோப்பினுல் தன்னுடைய சருமத்தை வழவழப்பாயும், சுத்தமாயும் வைத்துக் கொள்ளலாம். நான் எப்போதும் என் நண்பர்களுக்கு இதையே உபயோகிக்கும்படி கூறுகிறேன்." லக்ஸ் டாய்லட் ஸோப்பினுடைய மிருதுவான நுரை மிகவும் சுருசுருப்பாக மயிர்க் கண்களினுள்ள மாசு மருவிற்குக் காரணமான அசுத்தங்களையும், ஒவ்வொரு சிறு தூசிகளையும் போக்கி, சுத்தப்படுத்தி, சருமத்தை புதுமையாகவும் வழவழப்பாகவும் செய்கிறது.

லக்ஸ் டாய்லட் ஸோப்

LTS. 64-172 TM.
LEVER BROTHERS (INDIA) LIMITED

ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
43, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

மாலை 9	JANUARY 1943 :: சித்திரபானு ௵ தை ௴	முத்து 1

பொருளடக்கம்

			பக்கம்
1	ஸ்ரீ பகவான் ரமண மஹரிஷி	கா. சி. வேங்கடரமணி	2
2	என் கனவு	Do.	3
3	யுத்தத்திலுள்ள அனுபவங்கள்	பானு	6
4	உதிர்ந்த மணிகள்		8
5	கிராம வைத்தியரே கிராம வாத்தியாருமானால்	டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி	9
6	தும்பைப்பூ	மு. அருணாசலம்	15
7	விஞ்ஞானத்தின் சோதனை	ஆர். கே. விஸ்வநாதன்	18
8	ஆகாரச் சீர்திருத்தம்	Dr. டி. எஸ். திருமூர்த்தி	20
9	கப்பலோட்டிய தமிழன்	ஆ. சுப்ரமணிய பாரதி	26
10	நதியில் கலந்த தத்துவம் ...	ஸா. ஸேதுராமன்	32

“பாரதமணி”யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனல்ல.

ஸ்ரீ பகவான் ரமண மஹரிஷி

கா. சி. வேங்கடரமணி

ஸ்ரீ பகவான் ரமண மஹரிஷியின் அறுபத்திநான்காவது ஜயந்தி மார்கழி௴ 9 ஆம் தேதி (1942 டிசம்பர் 24௳) குருவாரம் புனர்வஸு நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் நிறைவேறியது. இதுவும் இந்தக் கலிகாலத்தில் ஒரு புண்ணியந்தான்.

நான் இந்தியா முழுவதும் ஐந்து தடவை பல க்ஷேத்திரங்களுக்குப்போய் தீர்த்தாடனம்செய்து திரிந்திருக்கிறேன். யோகிகளையும் ஸித்தர்களையும் கண்டு தரிசிக்கவேண்டுமென்பது அந்த யாத்திரைகளின் முக்கிய நோக்கமாயில்லாவிட்டாலும் நான் பல மஹான்களைத் தரிசித்திருக்கிறேன். இவர்களுக்குள் திலகமாய் நிற்பது மூன்றே மூன்று பேர்தான். நமது தமிழ்நாட்டின் பாக்யம் அம் மூவரும் நமது நாட்டிலே ஜீவித்து வருகிறார்கள். இதுவே நமது சோழநாட்டுக்கு ஒரு பெரும் செல்வப். பேரின்பப். சங்கரர், ராமானுஜர், மத்வாசாரியார் இம் மூவரும் பிறந்து வளர்ந்து தொண்டு புரிந்து புத்துயிரளித்த நாட்டிலேயே மறுபடியும் இப்பொழுது ஒரே காலத்தில் மூன்று மஹான்கள் தபஸ் செய்து வருகிறார்கள். இந்தக் கொடிய மகாபாரத யுத்தம் முடிவிலிருந்து ஒரு புதிய பகவத்கீதை இவர்கள் தபஸால் எற்படுமென்பதில் எனக்கு ஐயமில்லை.

ஸ்ரீ பகவான் ரமண மஹரிஷிகள்

காஞ்சி காமகோடி பீடாதிபதியாய் இப்போது விளங்கிவரும் மஹான் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

ஸ்ரீ அரவிந்த கோஷ்.

பகவான் ரமண மஹரிஷியைப் பற்றி நான் எழுதவோ சொல்லவோ எனக்குச் சக்தியில்லை. தப்பளைக்குத் தாமரை பூவிலடங்கிய தேனின் சொல்லால் சித்திரிக்கும் சுவை தெரியுமா? கட்டுக்குள் இவர்கள் அமைவதில்லை. புஷ்பத்தில் புகுந்து நிற்கும் மணம் போலும், தேனில் கலந்து நிற்கும் சுவை போலும் ஸ்வாநுபவம் ஒன்றால்தான் இவர்களின் மகிமையை அறிந்து ஆனந்திக்கலாம்.

சாந்தி வெள்ளம் புரண்டு மலையுச்சியிலிருந்து சமதரையைக்கண்டு களித்து ஒரு பள்ளத்தாக்கில் தேங்கிக் குவிந்து அலையில்லாமல் நின்று அக்கம் பக்கம் வறண்டு போகாமல் கடலோரம் வரையில் உயிர்ப் பாசனம் அளிக்கும் தடாகம் போல் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி திருவண்ணாமலையின் சிகரத்தை விட்டு இறங்கி, மலையின் அடிவாரத்தில் தடாகம்போல் அலையன்வியில் சாந்த வெள்ளம் பெருகி கருணை நிலையில் வீற்றிருக்கிறார். அக்கரை தெரியாது—ஆனால் அலைகள் கிடையா. கண்ணுக்குப் பரவசம், உள்ளத்திற்கு ஆனந்தம். உண்மையில் ஸ்ரீ ரமண பகவான் சாந்த நிலையில் நிற்கும் ஒரு பெரும் எரிதான். நம்முடைய ஊருக்கும் வயலுக்கும் ஜீவநதிபோல வந்து தானாகவே பாயாது—ஆனால் இந்த எரி ஜீவநதிக்கே மூல காரணமாகும். நாம்தான் போய் நமஸ்கரித்து நமக்குள்ள குடத்திலோ ஸ்தாலியிலோ கங்கைபோல மொண்டு அகத்திற்குக் கொண்டுவந்து உள்ளம் பூரிக்கப் பூஜிக்கவேண்டும்.

மோட்சம் அடையும் வழியை நாமே தேடிக் கடந்து, பொறுத்துக் கண்டுபிடித்து அடையவேணும்.— ஆகாயத்தில் மினுமினுக்கும் நட்சத்திரம் இருண்ட இருளில் வழிகாட்டுவதுபோல பிறர் உதவி. பூமியை நோண்டிக் கொண்டே போனால் கற்பாறையாயினும் ஒரு ஆழத்தில் நீர் சுரப்பது நிச்சயம் போல, நாம் தலைவணங்கி நம்மையே ஆத்ம விசாரணை விடாமல் செய்துகொண்டே போனால் மோட்சம் கிடைக்கும், என்பதற்கு பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியே இக் கலிகாலத்திலும் ஒரு அசையாத சாக்ஷி.

என் கனவு

கா. சி. வேங்கடரமணி

அத்தியாயம் 3.

பள்ளி புகுதல்: கூண்டில் கிளி அடைபட்ட கதை.

தாய்ப்பால் ஊட்டி துள்ளிக்குதிக்கும் மூன்று மாதத்து இளம் கன்றுக்குட்டியிடம் உழவடித்துக் கால்சோர்ந்த காளைமாடுபோய் காதில் பின்வருமாறு ஊதினால் அதை அந்தக் கன்றுக்குட்டி நம்புமா?

“என் துள்ளிக் குதிக்கிறாய் கன்றுக் குட்டியே! உன் கொட்டம் இன்னும் நாலு மாசந்தானே? பிறகு உன் காதை அறுத்து உன் கொம்பைத் தீய்த்து ‘காய’டித்து, சூடுபோட்டு உழவிலிறக்கி பாரத்தில் ஏற்றி கைகூசாமல் ‘தார்’ போடுவார்களே, அப்போதல்லவோ வாழ்வின் ஸ்வாரஸ்யம் தெரியும்! ஆனாலும் துள்ளிக் குதிப்பதை இப்போதே பூரணமாய்த் துள்ளிக்குதித்து மனதைத் தீர்த்துக்கொள்.”

இந்த முறையிலேயே என்தாய் எனக்கு அடிக்கடி சொல்லுவதுண்டு. “குழந்தாய், உன் விஷமம் எனக்குச் சகிக்கவில்லையே! இன்னும் ஆறுமாசம் எப்படிக் காலம் போகப்போகிறது? தை பிறந்ததும் உன் அக்கா கல்யாணத்துடன் சேர்த்து, உனக்கும் ‘பூணலை’ப் போட்டு உன்னைப் பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டால், தானே உன் கொட்டம் அடங்கிப்போய்விடும்!”

“அம்மா, நானா பள்ளிக்கூடம் போகப் போகிறேன். ஒருநாளுமில்லை” என்று சொல்லிக் குப்பியிலுள்ள சீனாக் கற்கண்டு கட்டியொன்றை வாயில் போட்டுக்கொண்டு, குதித்துக் கொண்டு தெருவில் ஓடிப்போய், செங்கற்பட்டு ஜில்லா காடுகளிலும், கற்பாறைகளிலும் குன்றுகளிலும் திரிந்து கிளாக்காயைப் பறித்துத் தின்றுவிட்டு, பாக்கியைப் பை நிறையப் போட்டுக்கொண்டு சட்டையை வீணாக்கி விடு திரும்புவேன்.

[2]

உபநயனம் முந்தியும், பள்ளி புகுந்தது பிந்தியும் என்று நினைக்கிறேன். எனக்கு ஆறுவயதில் ஆனிமாதத்தில் உபநயனம் —கர்ப்பத்தில் நான் இருந்த பத்து மாதத்தையும் கணக்கில் சேர்த்து சாஸ்திரோக்தமாய் எனக்கு ஏழுவயதில் உபநயனம். காவேரிப்பூம்பட்டினத்தில் பிராசீன சொந்த கிருஹத்தில் என் தமக்கையின் கலியாணத்தோடு சேர்ந்து என் உபநயனம் பிரபலமாக நடந்தேறியது. சில கல்யாணக் காட்சிகள் மாத்திரம் படம்பிடித்ததுபோல என் கண்முன் இன்னமும் நிற்கின்றன.

ஜட்ஜ் சேஷகிரி ஐயரின் வைரக் கடுக்கன்கள்; முகத்திற்கு கடுக்கனோ, கடுக்கனுக்கு முகமோ என்கிற சந்தேகம் ஜனிக்கும்படியாய் நாங்களெல்லோரும் கூடி அக்காவையும் அத்திம்பேரையும் வஸ்திரங்கள் மூலமாயும், வாழைநார் மூலமாயும் முடிபோட்டு ஒன்றுசேர்த்து

வைத்தது; நான் சந்தியாவந்தனம் செய்யமாட்டேனென்று பிடிவாதம் பிடித்தது; ஆடையில் பிடித்தமில்லாத எனக்குப் பல சிவப்புப் பட்டுகள் ஆசியுடன் கிடைத்தது; கலியாண அமர்க்களத்தில் தொட்டதெற்கெல்லாம் என் தகப்பனரின் முன்கோபம்; என் சித்தப்பாவின் தந்திரமான சாமர்த்தியமான எதையும் அழிக்கும் புன்சிரிப்பு—அவருக்குப் பிள்ளை இல்லை. கல்லியாணமே ஒரு நாடகமாய்த் தோன்றியதுபோல்!

சம்பந்தி முறையில் என் அத்திம்பேருக்கு மாமாவாகவும், திருவல்லிக்கேணியில் பிரபலமாகிக்கொண்டு வந்த வக்கீலாகவும், பிற்காலத்தில் ஜட்ஜ் பதவி வகித்தவருமான டி. வி. சேஷகிரி ஐயர், கலியாண மாப்பிள்ளையைத் தோற்கடித்துவிட்டார்! அவரைச்சுற்றி வணக்கத்துடன் சுழன்டவர்கள் பலபேர்—ஒரு சொட்டுத் தேனைச் சுற்றிவரும் ஈ எறும்புகளைப்போல்.

என்னுடைய ஆறுவது வயதிலேயே வக்கீல் ராஜ்யத்தின் மகிமையையும், ஆடம்பரத்தையும், செல்வாக்கையும் கண்டு மயங்கினேன். சேஷகிரி ஐயரின் வைரக்கடுக்கன்தான் என்னையே அறியமால் நான் எம். ஏ., பாஸ்செய்தும் 'புரொபஸராக'ப்போகாமல், வக்கீலாகப் போகும்படி செய்ததற்கு மூலகாரணமென்று நம்புகிறேன்.

கலியாணம் முடிந்தது. என்தாயும் தந்தையும் கணக்குப் போட்டுப் பார்த்தார்கள். கடன்தான் சுமந்தது. பிதுரார்ஜித சொத்துக்குத் தலைவலி ஆரம்பம்! உபநயனத்தில் ஆரம்பித்தது, எம். ஏ., பி. எல்., பாஸ்செய்ததும் பூர்த்தியாயிற்று இதுதான் ஆங்கிலப்படிப்பின் மகத்துவம்!

என்தகப்பனர் ஒருமாத லீவில் வந்தார். கலியாணத்தின் ஐந்தாவதுநாளே லீவு முடிந்துவிட்டது. உடனே புறப்பட்டுத் தம் உத்தியோகத்தைக் காப்பாற்ற திருப்போரூர் பனங்காட்டுக்குச் சென்றுவிட்டார். நானும் என்தாயும் கூடத்தான்!

திருப்போரூர் என்பது ஓர்குக்கிராமம். செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ளது. பிரபல சுப்ரமண்ய ஸ்வாமி க்ஷேத்திரம். அங்குதான் நான் முதல் முதலில் பள்ளி புகுந்தேன்.

[3]

திருப்போரூர் ஓர் அழகிய க்ஷேத்திரம். ஊரைச்சுற்றிச் சிறு குன்றுகள். கோவில், குளம், அதை ஒட்டி நாலு தெருவுகள்—மயிலாப்பூர் போன்ற திட்டம். இது என் கண் முன்னுல் இன்றும் நிற்கிறது. அந்தக் குளத்தை ஒருநாளும் மறக்க மாட்டேன். வழக்கம்போல பாசிப்படிதான். ஒருதடவை சறுக்கிவிழுந்து மூழ்கிவிட்டேன். நீரில் பேராசைகொண்ட எனக்கு அந்தச் சம்பவமும் நியாயமே. தவிர, அப்போதுதான் நான் நீந்தக் கற்றுக்கொண்டிருக்கவேண்டும்!

நான் ஆறுவது வயதில் அநுபவித்த இந்த ஊரையும், குளத்தையும், கோயிலையும், மறுபடியும் போய்ப்பார்க்கவேண்டுமென்று, நான் முப்பது வருஷகாலம் சென்னையிலிருந்தும், பலதடவைகள் விரும்பியும், முடியாமல் போய்விட்டது.

பன்னிரண்டு வயதுவரையில் இளம் பிராயத்தில் நான் ஓடியாடி விளையாடின குக்கிராமங்களை எல்லாம் மறுபடியும் இப்போது போய்ப்பார்த்து ஒவ்வொரு ஊரிலும் மூன்று நாளாவது தங்க வேண்டுமென்று விருதம் எடுத்துக்கொண்டிருந்தும் இன்னும் அது நிறைவேறவில்லை. "பாரதமணி" சற்று ஓய்வு கொடுத்தவுடன் இந்த விருதத்தை நிறைவேற்றலாமென்று எண்ணுகிறேன்.

[4]

நாங்கள் திருப்போரூரில் குடியிருந்த விட்டுக்கு எதிர் விட்டில் வைதிக சிரத்தையுள்ள ஓர் சாஸ்திரியார் இருந்தார். ஸம்ஸ்கிருதம் நன்ருய்ப் படித்தவர்; சிலர்; சிஷ்டர். அவரிடம் தான் முதல் முத

ஸில் ஸம்ஸ்கிருதம் படிக்க என்னை ஒப்புவித்தால் சந்தியாவந்தனமாவது சரியாக படியுமென்று என் தகப்பனார் எண்ணி, ஒரு நல்லநாள் பார்த்து, என்னை அவரிடம் அனுப்பிவிட்டார். அவர் வீட்டுக்கு லகுவில் போகமாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பேன். 'அவர்தான் நம்மாத்துக்கு வரட்டுமே!' என்று சொல்லுவேன். கையில் இரண்டு கற்கண்டுக் கட்டியுடன் — படிப்புக்காக தாயின் நன்கொடை!—இரண்டு பக்கத்திலும் ஜவான்களின் 'பாரா'வுடன் அவர் வீட்டுக்கு முதல் முதலில் போய்ச்சேர்ந்தேன்.

இந்த சாஸ்திரிகளுக்கு என் தகப்பனாரிடம் மிகவும் மதிப்புண்டு. ஏனென்றால் வைதிக கர்மாவில் என் தகப்பனார் தாராளமாகச் செய்வார். ஆனால் அவர் என்னை செல்லப் பிள்ளையாய் வளர்த்தது அவருக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை போலும்! தவிர, பள்ளி புகுவதற்குமுன் நான் தெருவில் செய்த அடங்காத விஷமத்தையும் அவர் சகிக்கவில்லை. நான் பாடம் படிக்க உட்கார்ந்த அரை மணிக்குள் 'ஜ' என்னும் அக்ஷரம் என் வாயில் நுழையவில்லை. ஒரு தடவை சொன்னார். இரண்டு தடவை சொன்னார். மூன்றாம் தடவையும் சொன்னார். நான் பிரயாசைப்பட்டும் மூன்று தடவையும் வரவில்லை—என்மனது தெருவில் ஓடும் ஆடுமாடுகளிலும் காடுகளிலும் நின்றது. நாலாம் தடவை மறுபடியும் அவர் திருப்பிச்சொல்வதற்குப் பதிலாய் தாம் சீவிக்கொண்டிருந்த வாழைப்பட்டையில் ஒன்றை எடுத்து 'ஜ' என்று சொல்லிக்கொண்டே என் இளம் தொடையில் பலமாய் அடித்தார். தட்டினாரோ இல்லையோ, மின்னல்க்கொடி வேகமாய் என்கையிலிருந்த சிலேட்டை அவர் மண்டையில் எறிந்தேன். உடனே வீட்டுக்கு ஓட்டம் பிடித்துவிட்டேன். என் சந்தியாவந்தனமும் ஸம்ஸ்கிருத வித்பத்தியும் என்கூட ஓட்டம் பிடித்துவிட்டன. சாஸ்திரியாரவர்கள் சாபம்தானோ என்னவோ — இதுவரையில் நான் பலதடவைகள் முயற்சி எடுத்து ஸம்ஸ்கிருதம் சரியாக வருகிறதில்லை. பாறையில் விழுந்த மழை ஜலம் போல வழிந்து ஓடிப்போய் விடுகிறது. இந்த சாபவிமோசனத்திற்கு வேண்டிய வழிகளை இப்போது தேடிவருகிறேன். சாஸ்திரியார் அவர்கள் வம்சாவளியில் யாராவது இப்போது ஜீவித்திருந்தால் ஒரு 'பாரதமணி' பிரதி இனாம் காப்பியாக அனுப்பலாமென்று எண்ணுகிறேன். தவிர திருப்போரூர் போய் அவரைக் கண்டு மன்னிப்புக் கேட்கலாமென்றும் நினைக்கிறேன். அதுவரையில் ராமாயண பாராயணம் செய்துகொண்டு வருகிறேன். வால்மீகியின் நாதபிரும்மத்திலேயே என் மனது லயித்து நிற்கிறது.

யுத்தத்தினுலுள்ள அனுபவங்கள்

பாலு

ஜனங்களின் லோகானுபவத்தில் பெரும்பாலராலும் பாராட்டக்கூடியதும் பெரும்பாலருக்கு நன்மையை விளைவிக்க கூடியதுமான நற்செய்கைகளால் சில கெடுதல்களும், பெரும் பான்மையோருக்குக் கெடுதலை விளைவிக்கும்படியான கெட்ட செய்கைகளாக விருப்பினும் அவற்றின் பலனுக சில நன்மைகளும் உண்டாகின்றன என்ற விஷயம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடியது. தற்காலம் நடைபெறும் யுத்தமானது தமது தேசம் சம்பந்தப்பட்ட வரையில் எவ்வித நன்மைகளை விளைவிக்கும் என்ற விஷயத்தைப்பற்றி நாம் தீவிரமாக இப்போது யோஜிப்போம்.

யுத்தமில்லாமல் எல்லா தேசங்களும் சமாதானமாக இருந்த நாட்களில் நமது தேசத்திலுள்ள தேவைப்பொருள்கள் அனேகம் சிரமமில்லாமல் அன்னிய தேசங்களிலிருந்து வந்துகொண்டிருந்தமையால் நமக்கு ஒருவித கஷ்டமும் தெரியவில்லை. இப்போது நடக்கும் யுத்தத்தினுல் அன்னியநாடுகளிலிருந்து அந்தந்த சாமான்கள் வரத் தடைபெற்றிருப்பதால் அந்தக் கஷ்டத்தை நாம் இப்போது மிகவும் கடுமையாக அனுபவிக்கும்படி நேர்ந்திருக்கிறது. காலையில் எழுந்திருந்ததும் நவீன நாகரீகத்திற்கேற்ப, காபியோ, கோகோவோ, ஓவல்டின்னே, அல்லது தேத்தண்ணீரோ, இவைகள் அவரவர்களின் பழக்கத்திற்கு தக்கபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரே வீட்டிலுள்ள பலவர்கள் மேற்கூறிய ஆகாரங்களில் ஒவ்வொன்றைப் பழக்கப்படுத்திக்கொண்டு அவரவர்களின் சௌகரியப்படி அவைகளை உபயோகித்துக்கொண்டு வந்தார்கள். தற்காலம் இந்த ஆகாரங்கள் அயல்நாட்டிலிருந்து வரக்கூடாமையால் இவைகள் சுலபமாய்க் கிடைக்கக்கூடியன வாயில்லை. இவைகளை நம் நாட்டில் தயார் செய்யும்படியான யோக்யதையும் நம் நாட்டாருக்கு இல்லை. ஆனதுபற்றி இவ்வித ஆகாரங்கள் பலவீடுகளில் அறவே நிறுத்தப்பட்டுவிட்டன.

நிறுத்தக்கூடாத வெகு சில சாமான்கள் நமக்குக் கிடைப்பது வரவர மிகக் கஷ்டமாகவிருக்கிறது. வெகு அலட்சியமாய் நினைத்து வந்ததும் முக்கியமான தேவைப்பொருளுமான குண்டூசிகள் கிடைப்பது இப்போது வெகு துர்லபமாயிருக்கிறது. இந்தக் குண்டூசிகள் நம்நாட்டில் செய்வதற்கு இதுகாறும் யாராவது சிரத்தையெடுத்துக்கொண்டார்களாவென்று தெரியவில்லை. கேவலமாக உள்ள இக்குண்டூசிகளுக்கு நாம் அன்னியநாட்டை எதிர்பார்த்துக்கொண்டிருந்து வருகிறோம். இதேமாதிரித்தான் நமக்குத் தேவைப்படும் கடுதாசுகளும் நமக்குத் தேவையுள்ள அளவு கடுதாசுகள் நாமே நம்நாட்டில் தயாரித்துக்கொள்ள நமக்கு யோக்யதை இல்லையா? நாம் அதற்குத் தற்காலம் இவ்வளவு சிரமப்படுவதற்குக் காரணம் என்ன? தினசரிப் பத்திரிகைகளின் சந்தாவானது நமது நாட்டிலேயே போதுமான அளவு கடுதாசு உற்பத்தி செய்திருந்தால் தற்காலம் இவ்வளவு அதிகப்படுமா நெருப்புப்பெட்டிகளைப் பாருங்கள். கிராக்கியாக விருப்பதோடுகூட ஒவ்வொரு இடங்களில் அவைகள் கிடைக்கிறதே துர்லபமாயிருக்கிறது.

இம்மாதிரி தினசரி நமக்கு இன்றியமையாத தேவைப் பொருள்களுக்கு நாம் அயல்நாடுகளின் தயவையே எதிர்பார்த்திருந்ததாலுண்டாயிருக்கும் கஷ்டங்கள் நாம் தற்காலம் வெகுகடுமையாக அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

அன்னியநாட்டு ஆளுகையினால் உண்டான பலன்கள்தான் இவைகள் என்பதற்கு சந்தேகமில்லை. ஆனால் நமது நாட்டில் இந்த சாமான்களை நமது தேவைக்குத் தகுந்தவாறு நாமே உற்பத்தி செய்வதற்குண்டான பிரயத்தனம் நாம் செய்யவில்லை என்று சொல்வது தவறாகுமா? செய்த பிரயத்தனங்கள் எதாவது தடைகளினால் நிறுத்தப்பட்டனவா? இனியாவது நாம் இது விஷயமாக சிரத்தை எடுத்துக்கொண்டு அன்னிய நாட்டாரின் உதவியில்லாமல் நாமே நமது தேவைப்பொருள்களைத் தயார் செய்துகொள்ள பிரயத்தனம் செய்வோமா?

மின்சார சக்தியானது நமதுநாட்டில் கிராமாந்திரங்களில் கூட பரவிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலிருக்கும் ஜனங்களும் தங்கள் ஓய்வுநேரங்களில் இந்த மின்சார சக்தியின் உதவியைக்கொண்டு நுட்பமான சிறிய கருவிகள் செய்ய என் எத்தனிக்கக்கூடாது.

ஐரோப்பாவிலுள்ள சின்ன தேசங்களில் இம்மாதிரி நுட்பமான கருவிகள் செய்து வருவது நமக்குத் தெரிந்த விஷயம். நாமும் என் அம்மாதிரி செய்யக்கூடாது? நமக்குப் பௌருஷம் இல்லையா? உணர்ச்சியில்லையா? வாழ்நாட்களை வெகு சுலபமாகக் கழித்துத் தங்கள் ஆயுள் முழுதும் வீணாக்கித்தான் இவ்வுலகில் பிறந்ததின் காரணம் இன்னவென்று யோசனை செய்யாமலும் ஓர் பூபாரமேயின்றி லோகோபகாரமாக ஒரு காரியத்திலும் ஈடுபடாமலிருந்து கடைசியில் பிராணனைவிட்டுப் போவதில் தங்கள் இவ்வுலகில் உற்பத்தியானதின் பலனே இல்லாமல் போவதைப்பற்றிச் சற்றேனும் கவலையெடுத்துக்கொள்ள மாட்டார்களா?

இப்புதுவருஷத்திலிருந்தாவது நமக்கு இந்த யுத்தத்தினால் ஏற்பட்டுவரும் அனுபவத்தினால் நமக்குள்ள தேவைப்பொள்களை நாமே தயாரிக்கத்தக்க யோக்யதையுள்ளவர்களாவோமா?

உதிர்ந்த மணிகள்

சென்ற பத்து இருபது வருஷங்களுக்குள் தென்னிந்தியாவில் சங்கீதத்தில் ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சிக்கு கங்கு கரையில்லை. அதுவே நமது நாட்டில்ஏற்பட்டிருக்கும் புத்துயிருக்கு ஓர் பெரிய சாக்ஷி. இக்கிளர்ச்சியால் அரசியல் உலகில் ஒருபுதிய தோற்றம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. எப்பொழுது ஸங்கீதத்தில் புத்துயிர் பிறக்கும்படியான உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறதோ அப்பொழுதே நம் நாட்டில் வாழ்வின் மேன்மையும் ஏற்படுகிறது. மேல் நாட்டு நாகரீகத்தின் தாக்குதலால் நமது நாகரீகத்திலுள்ள பல அரிய விஷயங்களை நாம் மறந்திருந்தோம்.

ஆனால் இவ்வுணர்ச்சி மாறி ஓர் புத்துயிர் அளிக்கும் உணர்ச்சி இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இதுஎன்னவென்று நாம் தெளிவாயறிவது அவச்யம். நமது நாகரீகத்தின் பழமையில் ஒரு அளவில்லா பெருமையையும் வரும் காலத்தில் நாம் செய்யப்போகும் ஒரு பெரிய காரியம் உண்டு என்ற உணர்ச்சியும் நம் முன்னேற்றத்திற்கு ஒரு பெரிய அறிகுறியாகும்.

ஸ்ரீ. எம். வேங்கடசுப்பராவ்.

மகாதேவ கோவிந்த ரானடே இருந்த காலத்தில் மெகாலேயால் ஏற்பட்டக் கல்வித்திட்டம் முப்முரமாக அரசாண்டு வந்தது. வெள்ளையரின் உடையும், இலக்கண இலக்கியங்களும், நடையுடை பாவனைகளும்தான் நமது இளைஞர்களுக்கு வழிகாட்டியாயிருந்தது. அவர்களின் மனப்பான்மையும் மேல்நாட்டு நாகரீகத்தைச் சார்ந்துதான் நின்றது. ஷேக்ஸ்பியரின் இலக்கியத்தின் ஒரு பக்கத்தின் விலைமதிப்பு நமது ராமாயணம் மகாபாரதம், இதர இலக்கியங்களையும் விட மிக்க விலையுயர்ந்தது என்று மெக்காலே வாய்கூசாமல் சொன்னார். இந்த மோசடியான மனப்பான்மை நமக்கு ஏற்பட்டிருந்த சமயத்தில்தான் மகாதேவ கோவிந்தரானடே ஒரு வழிகாட்டியாய் நின்றார்

ஸ்ரீ. வி. பி. ராமஸ்வாமி.

நம் நாட்டில் கன்னியாகுமாரி முதல் ஹிமயகிரி வரை நாம் எங்குதேடினலும் தமிழர், தெலுங்கர் இவர்கள் இருவரைப் போல் பலவிதங்களில் ஒத்துமைப் பெற்ற இரண்டு வகுப்பினரை நாம் காணமுடியாது. ஒரே பழக்கவழக்கம், மனப்பான்மை, செயல், அனுபவம், பல விஷயங்களில் ஒற்றுமை .... ஒரு வகுப்பின் நாகரீகத்தை மற்றொரு வகுப்பு வெறுக்காமல் ஒற்றுமையுணர்ச்சியுடன் வரவேற்பதால்தான் நமது வாழ்விற்கே பெருமை. நமதுநாட்டிற்கே ஒற்றுமை. வேற்றுமையின் கண் ஒற்றுமை. இந்தப்பார்வைதான் இந்தியாவின் உண்மையான கண் பார்வை.

ஸ்ரீ. எம். வேங்கடசுப்பராவ்.

ஸந்தேகமே இல்லை உண்மையான ஜனநாயகம் ஒரு அன்னிய தேசத்தை வெகுகாலம் அரசாள முடியாது.

ஸர். ஜான் மெயினர்ட்.

நமது நவீனநாகரீகத்தில் கப்பும் கிளையும் இல்லையுமே அதிகம். ஆனல் அதற்கு பூவோ பழமோ ஏற்படவில்லை.

ஸர். எஸ். ராதாகிருஷ்ணன்.

கிராம வைத்தியரே கிராம வாத்தியாருமானால்?

டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ., எல். ஐ. எம்,

மாயவரம்.

நாட்டின் கிராமங்கள்தான் நமது ஜீவநாடிகள். இக்கிராமங்களின் ஜீவநாடிகள் இவைகளின் குடிஜனங்கள். இவர்களின் உடல்நிலையைப் பாதுகாக்க இன்றியமையாதவன் கிராமவைத்தியன். இவர்களின் மனோதிடத்தையும் அபிவிருத்தியையும் காக்க வல்லவன் கிராம வாத்தியார். இவ்விருவர்களும் எவ்வளவுக்கெவ்வளவு தேர்ச்சி, ஊக்கம், சிரத்தை இவைகளோடு ஜனங்களுடன் ஒத்துழைக்க முயலுகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு கிராம ஜனங்கள் நன்மையையடைவார்கள்.

இவ்விதமான வைத்தியர்களோ, வாத்தியார்களோ தற்போது அனேக கிராமங்களில் இல்லை என்றே சொல்லலாம். காரணம் யாதெனில் நிரந்தரமாக கிராமஜனங்கள் இவர்களுக்குச் சம்பளம் கொடுத்து நிலைநிறுத்திக்கொள்ள முயலாததே. அனேக கிராமங்களில் வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யாதொரு கட்டுப்பாட்டிற்கு முட்படாமல் கூடுமானவரையில் தங்களுக்காதாயமான வழியில் தொழிலை நடத்துகிறார்கள். இதன் விளைவு கிராமஜனங்களுக்குத் தக்க சிகிச்சை தாரதம்யமில்லாமல் கிடைக்காது. மிகவும் சிரமசாத்தியமான வியாதிகளில் தக்க வைத்தியர்களைத் தேடியலைவதே ஜனங்களின் பெரும் அவஸ்தையாக முடிகிறது. வாத்தியார்களோவெனில் சர்க்கார் உதவி சிறிதுபெற்று ஏதோ தெரிந்த வரையில் அதிகாரிகளுக்கு கோபம்வராத வழியில் பாடங்களைப் போதிக்க முயலுகிறார்கள். அவர்களை அடிக்கடி மேப்பார்வை பார்த்து ஒழுங்காகத்தூண்டும் வகையறிந்தவர்களாக யாரும் இதுகாறும் முன் வரவில்லை. சில சமயங்களில் கிராம ஜனங்களே பள்ளிக்கூடத்தில் யாதொரு சிரத்தையும் கொள்ளுவதில்லை.

இவ்வித நிலையில் அதிகாரிகளும் யாதொன்றும் செய்ய வகையறியாமல் வாளாவிருக்கும்படி ஏற்படுகிறது. அனேக கிராமங்களில் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பவும் பெற்றோர்கள் சிறிது மிசைகிறதில்லை. பல சாக்குகள் கூறி, பிள்ளைகளைத் தங்களுடன் வயல்களில் வேலைசெய்ய நிறுத்திக்கொள்ளுகிறார்கள். இதன் காரணம் படிப்பில் அவர்களுக்குச் சிறிதும் பிரியம் இல்லாததே. இவர்களைச் சட்டத்தினால் பயப்படுத்தி "கட்டாய கல்வித் திட்டத்தை" அமுலுக்குக்கொண்டு வரவேண்டுமென்று கூறலாம். இதுவரையில் துரைத்தனத்தார் ஏன் எல்லா இடங்களுக்கும் இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவில்லை என்று கேட்கலாம். பணமில்லாமையே முக்கியக் காரணமெனக் கூறலாம். மனமிருக்குமேயாகில் வேறுவழிகளில் இக்காரியம் ஸபலமாகுமாறு செய்யலாமல்லவா?

மனமுள்ள ஊழியர்கள் இதைச் செய்ய முன்வரலாம். துரைத்தனத்தாரின்மீது துளிக்கூடச் சுமையைப் போடாது ஜனங்களின் கூட்டுறவின் மூலமாக இக்கல்வியைப் போதித்துப் பயனுறும்படி ஒரு திட்டம் தயாரிப்போம்.

ஒவ்வொருவரும் வியாதியின் அவஸ்தையிலிருந்து விடுபடவே விரும்புவார்கள். ஆகையால் வைத்தியனிடம் கட்டுப்பட்டேயாகவேண்டும். ஊக்கம் நிறைந்த ஊழியர்களின் முயற்சியால்

தகுந்த வைத்தியனை ஒரு கிராமத்தில் குடியேறும்படி செய்தால் கட்டாயம் ஜனங்கள் இவ் வைத்தியனிடம் உதவி பெற விரைவார்கள். இவர்கள் கூட்டுறவின் பேரில் வருட சந்தாவாக வைத்தியனுக்குச் சம்பளத்தை ஈடுசெய்யலாம். அல்லது அப்பொழுதைக் கப்பொழுது திரவிய சகாயம் செய்யலாம். இவ் வைத்தியன் இன்றியமையாதவன் என்று ஏற்படும்பொழுது இவன் மூலமாகப் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்கும்படி தூண்டலாம். அப்படியனுப்பாத குடும்பத்திலுள்ளவர்களுக்குச் சகாயமாக வைத்திய உதவியளிக்க முடியாதென்று சொல்லுவது அதர்மமாகாது. இம்முறை கட்டாயம் பயனளிக்கும். ஆனால் பள்ளிக்கூட வாத்தியாருக்குச் சம்பளம் துரைத்தனத்தார் கொடுக்காத இடங்களில் கிராமத்தாரே கொடுக்க நேரிடும். அப்பொழுது வைத்தியன் வாத்தியார் இருவருக்கும் போதுமான ஊதியம் கொடுக்க பலகிராமத்தார்களுக்கியலாது. மேலும் வைத்தியர்களுக்கோ அல்லது அவர்களை நியமிக்கும் ஊழியர்களின் சங்கத்திற்கோ கட்டுப்பட்டு நடக்கக்கூடாத துரைத்தன உதவிபெற்ற வாத்தியாரைக் காப்பாற்ற, பள்ளிக்கு பையன்களைச் சேர்க்கும் பொறுப்பை எத்தனை நாட்களுக்கு இச்சங்கமோ வைத்தியர்களோ ஏற்பார்கள்? இது அனுபவத்தில் பல இன்னல்களை விளைவிக்கும். வாத்தியார் தாம் வாங்கும் சம்பளத்திற்கும் போதனமுறைச் சட்ட திட்டங்களுக்கும் துரைத்தனத்தாருக்குக்கட்டுப்பட்டவர். அதனால் தான் பள்ளிக்கூடம் நிலைத்திருப்பதிற்கே வைத்தியனின் தயவை எதிர்பார்க்க வேண்டியதாகிறது. சில ஊர்களில் ஊதியத்திற்கும் வைத்தியன் சிபார்சை எதிர்பார்க்க வேண்டியிருக்கும். இப்படி இரு எஜமானர்களுக்குப் பதில்சொல்ல முடியாது.

இவ்வித நிலையில் ஒரு யோசனை தோன்றுகிறது. கிராம வைத்தியரே கிராம வாத்தியாருமானால் என்ன மகத்தான லாபம் ஏற்படாது? முதலில் வாத்தியாருக்கென்ற தனி ஊதியம் வேண்டியதில்லை. எல்லாம் மொத்தத்தில் வைத்தியர் சம்பளமாகவே சற்றுதாராளமாகக் கொடுத்துவிடலாம். துரைத்தனத்தாரை உதவியளிக்கக் கோரவும் வேண்டாம். அவர்கள் வாத்தியாரின் வேலையைக் கண்காணிக்கும் சிரமமும்பட வேண்டாம். கிராமக் குழந்தைகளுக்கு வேண்டிய ஆவச்யகக் கல்வி (Essential Education) உத்தியோகம் பெறுவதற்காகப் போதிக்கப் படுவதில்லை. ஆனால் உயர்தரக் கல்விக்காக நகரங்களுக்குப் போகும் குழந்தை யாதொரு தடங்கலுமடையாமல் இருக்கும். நகர பள்ளிகளில் பரீக்ஷிக்கப்பட்டுச் சேர்த்துக்கொள்ளப்பட்டும். கிராமத்தில் வைத்தியருக்குப் பொதுவாக ஒருமணி நேரத்திற்குமேல் தினசரி வேலை இருக்காது. ஆகவே மூன்றுமணி நேரம் குழந்தைகளுக்குக் கல்வியைப் புகட்டலாம். இருதொழில்களை இப்படியொருவரே செய்ய முடியுமா என்றுகேட்டால் முடியும் என்றே கூறுவேன். உடலின் நோய்களைத் தீர்த்து வலிவையூட்டுபவர் வைத்தியர் என்றால் மனத்தின் நோயகற்றித்திடமுறச் செய்பவர் வாத்தியார். தொழில் முறையில் நோக்குங்கால் இருவர்களும் வைத்தியர்களே. ஒவ்வொரு வைத்தியரும் வாத்தியாராக் மாறுவது சிரமமில்லை. கிராமத்தில் ஆவச்யகக் கல்வியைப் போதிக்குமளவிற்காவது வாத்தியராக மாறித்தானாகவேண்டும். இவ்விதம் ஒரு இயக்கம் தோன்றி ஜயமடைந்தால் நம் ஏழை பாரதநாடு எவ்வளவு நன்மை அடையும் என்று சற்றே எண்ணிப் பாருங்கள் இவ்விதம் உடலையும் ஊக்கத்தையும் வளர்த்து ஊக்கத்தை யளிக்க முன்வரும் வைத்திய வாத்தியார் உண்மையில் கிராமத்தின் ஆசார்யன் என்ற மிக்கப்பெரியப் பதவியைப் பெறுகிறான்.

இவ்வாசார்யன் மூலமாய் சகலவித நிர்மாண திட்டங்களையும் வகுத்து நடைமுறையில் கொண்டு வரலாம். இவ்வித வைத்திய வாத்தியார்கள் இனிமேல்தான் தர்ப்பிக்கப்படவேண்டும். அவர்களுடைய யோக்கியதாம்சங்களையும் நிர்ணயிக்கவேண்டும்.

நோயகற்ற வைத்தியரும் அறியாமையை யகற்ற வாத்தியாரும் ஒழுங்காக அமைக்கப்படாவிட்டால் கிராமஜனங்கள் சிறுகச்சிறுக நகரத்திற்குப் போகவே பிரயத்தனப்படுவார்கள். இப்படி ஜனங்களைத்தூண்டி கிராமத்தில் குடிசைத் தொழில்கள் முதலிய நிர்மாண திட்டங்களை வகுக்கும் ஆற்றல் படைத்தவர்கள் நகரத்தை நோக்கிச்சென்றுவிட்டால் பிழைப்பிற்கு வழிதெரியாத ஏழை ஜனங்களும் இவர்களைப் பின்பற்றி கிராமத்தைக் காலி செய்ய முயலுவார்கள். நாளடைவில் கிராமங்கள் சீர்குலைந்துவிடும். அப்பொழுது வாழ்விற்கு ஜீவாதாரமான விவசாயமும் குடிசைத் தொழில்களும் சமூகத்தில் திக்கற்ற அடிமைகள் செய்யவேண்டியவைகளாக மதிக்கப்படும். இதன் விபரீத விளைவு எங்கு கொண்டுபோய் நம்மை ஆழ்த்திவிடும் என்று நினைக்கவும் உள்ளம் நடுங்குகிறது.

சர்வநாசம் ஏற்படுமுன் பரிகாரங்களைத் தேடவேண்டும். நடைமுறைகளுக்கேற்றவைகளாக இருக்கவேண்டும் இப்பரிகாரங்கள். தியாகபுத்தியுடன் கிராமங்களில் குடியேறும் வைத்தியர்களோ வாத்தியார்களோ மிக்கக் குறைவு. வைத்திய வாத்தியார்களும் இனிமேல் தான் தர்ப்பித்தாகவேண்டும். மிக்கப் பாண்டித்யம் பெற்ற பட்டதாரிகளான வைத்தியர்கள் தகுந்த ஊதியம் பெற முடியாத கிராமத்தில் தொழில் செய்ய நிலைக்கமாட்டார்கள். ஒவ்வொரு கிராமமும் இவர்களைக் கூப்பிட்டு ஆதரித்து வைத்துக்கொள்ள முடியாது. குக்கிராமங்களில் கிடைக்கக்கூடியது என்னவென்றால் ஒருவைத்தியர் சாதாரணமாக எல்லா வியாதிகளையுமறிந்து சிகித்சை செய்யக்கூடியவராக இருந்து கஷ்டசாத்தியமானவைகளும் கடுமையானவைகளுமான வியாதிகளில் தேர்ந்த வைத்தியர்கள் அடிக்கடி ஆலோசனை கூறினால் அதேபிரகாரம் ஔடதங்களைக் கொடுத்து சிகித்சா விதிகளைப் பின்பற்றக்கூடியவராகவும் இருக்கவேண்டும். இவ்விதம் ஒரு தேர்ச்சிபெற்ற உதவி வைத்தியர் தானிருக்கமுடியும். வாரம் ஒருமுறையாவது பெரிய வைத்தியர் ஒருவரால் ஆலோசனை பெற்றுவரவேண்டும். இவ்வித ஏற்பாடுகளைக் கிராம ஜனங்களின் கூட்டுறவினால் சாதிக்கலாம். ஒரு ஏழு மைல் வட்டாரத்தில் 2000 ஜனங்களைக் கொண்ட கிராமங்கள் இருக்கும். மையமாயுள்ள கிராமத்தில் (பிர்க்கா மத்தியில்) இரண்டு தேர்ந்த வைத்தியர்கள், ஒரு மருத்துவச்சி, ஒரு உதவி ஔடதசாலையாள், ஒரு வேலைக்காரன் சுமார் பத்து அல்லது பன்விரண்டு நோயாளிகளைச் சிகித்சாசாலையில் வைத்து நிர்வகிக்கவேண்டிய ஏற்பாட்டுடன் ஒரு ஆதுராலயத்தை (Impatient and out patient hospital) நிர்மாணிக்கலாம்.

ஒரு வைத்தியர் வாரம் வாரம் ஒவ்வொரு கிராமத்திற்கும் போய் கிராமத்திலுள்ள வைத்திய வாத்தியார்களுக்குத் தக்க யோசனைகளும் உதவியும் அளிக்கலாம். இவ்விதம் பல பிர்க்காக்கள் சேர்ந்த தாலுக்காவின் தலைநகரத்தில் பிரதானமான சிகித்சாசாலையும் ஔடதசாலையும் ஏற்படுத்தி பிரதான ரண சிகித்சகர், மருத்துவ நிபுணர், அவர்களுக்குதவி வைத்திய நிபுணர்கள், ஔடதசாலை உதவியாளர்கள் வேலையாட்கள் முதலியவர்களையும் நியமித்து சகலருக்கும் உதவலாம். 60 நோயாளிகளை ஏற்று சம்ரக்ஷிக்க ஏற்பாடும் செய்யலாம். இவ்வளவும் 2,00,000 ஜனங்கள் கூட்டுறவின் மூலம் வசூலிக்கப்படும் சந்தாவினால் நடக்கும். அச்செலவு சுமார் இரண்டு லக்ஷ ரூபாய்களாகும். அதன் விவரம் பின்வருமாறு:—

						ரூபாய்கள்.
(1)	மாதம் ரூ.	25 விதம்	400	வைத்திய வாத்தியார் வருட சம்பளம்		1,20,000
(2)	„	100 விதம்	20	பிர்க்கா வைத்தியர்கள்	„	24,000
(3)	„	30 விதம்	10	„ மருத்துவச்சிகள்	„	3,600
(4)	„	20 விதம்	10	„ ஔடதசாலை உதவியாட்கள்		2,400
(5)	„	250 விதம்		தாலுக்கா பிரதான சிகித்சகர்	„	3,000
(6)	„	200 விதம்		„ உதவி ரண சிகித்சகர்	„	2,400
(7)	„	150 விதம்	1	„ உதவி ஸ்திரீ வைத்தியர்	„	1,800
(8)	„	150 விதம்	2	„ உதவி வைத்தியர்கள்	„	3,600
(9)	„	125 விதம்	1	ஔடதசாலை மேற்பார்வையாளர்	„	1,500
(10)	„	150 சிலவில்	3	குமாஸ்தாக்களுக்கு	„	1,800
(11)	„	100 விதம்	15	ஔடதசாலை வேலையாட்கள்	„	2,160
(12)	„	8 விதம்	10	பிர்க்கா „	„	1,360
(13)	„	1 விதம்	200	கிராம பள்ளிக்கூட வாடகை	„	2,400
(14)	„	20 விதம்	10	பிர்க்கா சிகித்சா சாலை வாடகை	„	2,400
(15)	„	100 விதம்		தாலுக்கா தலைமை வைத்தியசாலை	„	1,200
(16)	சிகித்சா சாலையில் ஏற்று சம்ரக்ஷிக்கப்படும் 180 நோயாளிகளுக்கு செலவு					14,000
(17)	முக்கியமான மூலிகைகள் முதலியவைகள் வாங்க					10,000
(18)	இதர செலவுகளுக்கு					2,780
					ஆக மொத்தம் ரூ.	2,00,000

* இச் சந்தா சராசரி நபர் ஒன்றுக்கு வருடத்திற்கு ஒருரூபாய் விதமாகிறது. இதைப்பணமாகவோ, அல்லது தான்யாதிகளாகவோ அல்லது உழைப்பின் கூலியிலிருந்தோ வசூலிக்கலாம். கடைசி முறையில் வசூலிக்கச் செய்யும் ஏற்பாடுகள் குடிசைத் தொழில்கள் பல முன்னுக்கு வர ஊன்றிய விதையாகும்.

மேற்காட்டியுள்ள செலவு விவரத்தில் மருந்துக்கான மூலிகைகள் முதலியவைகளுக்கு ரூ10,000 ஒதுக்கப்பட்டிருப்பது போதுமோ என்று ஐயமுறலாம். போதுமென்றே கூறுவேன். 200 கிராமங்களில் பணச் செலவில்லாமல் பள்ளிக்கூடப்பிள்ளைகளின் உதவியைக்கொண்டு விளையாட்டாகவே சேகரிக்கின்ற மூலிகைகள் 'ஆடாதுடை', கண்டங்கத்திரி சிந்திற்கொடி, துளசி, நெரிஞ்சில் முதலிய பல ஔடதங்கள். பணங்கொடுத்து வாங்கவேண்டியவை. சுக்கு, திப்பிலி முதலிய கடைச் சரக்குகள்; பால், நெய், எண்ணெய், தேன், வெல்லம், தங்கம், வெள்ளி, கஸ்தூரி, கோரோசனை முதலிய திரவ்யங்களே. நாட்டு மருந்துகளை அறிந்தவர்கள் இச் சரக்குகள் அதிகம் இல்லாமலேயே பல வியாதிகளுக்கு சிகித்சைக்குகந்த ஔடதங்கள் தயாரிக்கலாமென்பதை யறிவார்கள். ஒதுக்கிவைக்கப்பட்ட தொகை போதுமென்று ஒப்புக்கொள்ளுவார்கள்.

நம்நாட்டு மருந்துகளைப் பெரும்பாலும் கைக்கொண்டு இன்றியமையாத சில மருந்துகளும், சாதனங்கள் மட்டும் இதர முறைகளிலிருந்து சேர்த்துக்கொண்டும், இவ்வித வைத்தியசாலைகள் நடத்தப்படவேண்டும். அப்பொழுது தான் நாம் மிக்கக் குறைந்தசெலவில் மருந்துகளைத் தயாரிக்கலாம். சுதந்திரத்துடனும் தயாரிக்கலாம்.

நம்நாட்டு மருந்துகளே நமக்கு மிக்க உகந்தவை என்பது மேல்நாட்டு முறையும் நம்நாட்டு முறையும் நன்றாகக் கற்றறிந்த வைத்தியர்களின் மத்தியில் விவரித்து தீர்மானமாக வேண்டிய சித்தாந்தம். நான் அவ்வித சித்தாந்தத்திற்கு

வந்தபின் விளைவே இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் திட்டம்.

இத்திட்டம் அமுலுக்கு வந்தால் என்ன நன்மைகளேற்படும் என்பதை ஆராயலாம். முதலில் ஆவசியகக் கல்வியும் நோய்களுக்குப் பரிகாரமும் அதிகச் செலவில்லாமலேயே நிரந்தரமாக கிடைத்துக்கொண்டுவரும். சந்தாவின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றபடியால் கிட்டத்தட்ட 500 ஊதியம்பெற்ற உழைப்பாளிகள் ஜனங்களுடன் ப்ரதிக்ஷணமும்கூடிப் பழகி அவர்களின் நன்மதிப்பைப்பெற ஆற்றல் கொண்டிருப்பார்கள். இதன் விளைவு குடிஜனங்களுக்கு ஆப்தர்களாக நிர்மாண திட்டங்கள் யாவற்றிற்கும் நம்பிக்கையுடன் பொறுப்பேற்கும் ஓர் சங்கமாக மாறும் இந்த இலாகா.

500 ஜனங்களுக்கு மத்தியில் எல்லோராலும் நன்கு மதிக்கப்படவேண்டிய வைத்திய வாத்தியார்; ஒவ்வொருவரும் சராசரி 50 குழந்தைகளை வருங்காலத்தின் பிரஜைகளாக தேசிய மணம் கமழ போதிப்பதன் மூலம் ஜனங்களுக்குள் தினசரி வாழ்க்கையில் ஒற்றுமை நிலவ மிக்க உதவி செய்பவர் இவ்வைத்திய வாத்தியார். இவ்விதம் சமூக ஒற்றுமையை வளர்த்து வகுப்பு வேற்றுமை உணர்ச்சிகளின் வேர்களைக் களைந்தெறியலாம்.

இப்பிர்க்காக்களின் கூட்டுறவினால் நிறுவப்பட்டு ஒன்றுக்கொன்று ஆதாரத்தை தேடிக்கொள்ள மத்திய தலைமை சிகிச்சாசாலை தாலுக்கா தலைநகரத்தில். இவ்விதப் பெரியதொரு வைத்திய-வாத்தியார் இலாகா தாலுக்காவின் பூர்ணமான முன்னேற்றத்திற்கு ஜனங்களுடன் நேரில் கலந்துழைக்கும்.

இவ்வியக்கப் பலம்பெற்றால் பிறகு வைத்திய-வாத்தியார்களின் தூண்டுதல் பல இடங்களில் கிராமக் கிடங்குகளையும் பாங்கிகளையும் (Godowns & Banks) நிறுவ உதவும். பிர்க்காவின் தலைமை பாங்கி ஒன்றினால் இவைகள் பிணைக்கப்படலாம். வழக்கறிஞர் (Advocate) ஒருவரை இப்பாங்கியினாலோசனையாளராக நியமித்து பிர்க்காவின் மையக்கிராமத்தில் குடியேறச் செய்யலாம். இதன் மூலமாக இன்னும் பல சௌகரியங்கள் பிர்க்காவில் உள்ள ஜனங்கள் அடைவார்களென்பதை விவரிக்கின் பெருகும். ஆகவே ஊகித்துக்கொள்ளுங்கள்.

இப்பாங்கிகளின் மூலம் பண உதவி பெற்று கிடங்குகளில் விளைபொருள்களை ஈடாகவைத்து வரிகட்டுவது இதர அவசிய செலவுகளைச் செய்வது என்ற பழக்கம் ஏற்பட்டால் பிறகு பாங்கிகள் மூலமே விற்பனையும் செய்ய முயலுவார்கள். நாளடைவில் இவ்வியக்கம் பரவி பல ஊர்களை ஒன்று திரட்டி வியவகாரங்களைச் செய்யத் தலைப்பட்டால் விளைபொருள்களின் விலையை பாங்கியே நிர்ணயிக்கும் நிலையிலிருக்கும். அதாவது பொருளின் சொந்தக்காரர் பொருளின் விலையை நிர்ணயிக்கும் சுதந்திரம் திரும்பும். நிலத்திலுழைத்தவன் தன்னுரிமையைத் திரும்பப்பெறுவான். இது அவர்களுடைய ஸ்வராஜ்யம்.

இவ்வித பாங்கிகள், கிடங்குகளிவைகளுக்கு கணக்குப்பிள்ளைகளென்றும், காப்பாளர்களென்றும் இன்னும் 500 பெயர்களுக்கு ஊதியம் கிடைக்கும். உத்தியோகங்கள் ஜனங்களே நேரிட கொடுக்கவும் இயலும்.

இப்படி கணக்கெடுத்தால் குறைந்த பக்ஷம் 1000க்கு 5 பேர்களுக்குப் புதிதாக வேலை ஏற்படும். ஒவ்வொரு தாலுகாவிலும் உள்ள துரைத்தனத்தால் நிர்வகிக்கப்படும் ஸ்தாபனங்களின் ஊழியர்கள் தொகையை எண்ணிப் பாருங்கள். போலீஸ் உள்பட வேலைக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள், குமாஸ்தாக்கள், மணியம், கர்ணம், தலையாரி உள்பட, சராசரி 2 லக்ஷம் ஜனம்கொண்ட தாலுக்காவில் இருக்கும் துரைத்தன ஊழியர்கள் 1000த்திலிருந்து 2000க்குள்ளேதானிருப்பார்கள்-அப்பொழுது இன்னும் இவ்வளவு பேர்களுக்குத்

தொழில் கொடுக்க துரைத்தனத்தாருக்கு யாதொரு சுமையும் கொடுக்காமல் ஜனங்களின் கூட்டுறவினாலேற்படுவது வேலை இல்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க எவ்வளவு பயன்படும்!

கல்லாமை சீக்கிரத்திலழியும் என்பதையும் எண்ணி மகிழலாம்.

இவ்வியக்கத்தை நடை முறையில் கொண்டுவர விரும்பினால் சகிப்புத் தன்மை மிக்க உள்ள, அஹிம்சாவாதிகளாகிய தன்னலமற்ற பிரசாரகர்கள் முதலில் ஒன்றுகூடவேண்டும். துவேஷப் பிரசாரத்தை யறவே ஒழித்து தீவிரமாக எல்லோருடன் கூடிப்பழக அன்பே பிரதானம் என்பதை மனப்பூர்வமாக அனுஷ்டிக்கக்கூடியவர்களே வேண்டும். நாம் நம்முடைய அறியாமையால் அழிந்தோம். நம்முடைய அறியாமையால் அழிகிறோம். துரைத்தனமோ, இதர சமூக பொருளாதார சங்கங்களோ, நம்மை அழிக்கவில்லை. அவைகளால் நம்மையழிக்க முடியாது. நம்மை முன்னுக்குக்கொண்டுவர அவைகளே பாடுபட்டாலும் நாம் மனமுவந்து ஒத்துழைத்தாலொழிய அவைகளால் ஒன்றும் பலனளிக்கமுடியாது. ஆகையால் நம் கையே நமக்குதவி என்ற சத்தியவாக்கை நம்பி த்ரிகரணசுத்தியுடன் தேசத்திற்குழைக்கும் அன்பர்கள் ஒன்றுகூட வேண்டும். இவர்களின் ஒத்துழைப்புடன் வைத்திய வாத்தியார்களைத் தர்ப்பித்து செய்யத் துவங்கவேண்டும்.

இந்த கிராம வைத்திய-வாத்தியாருக்குதவுமாறு தகுந்த வைத்தியகிரந்தங்களும் போதனாமுறைத் திட்டங்களும் பாடபுத்தகங்களும் எழுதப்படவேண்டும். இத்துறையில் சிறிது எழுதத் தலைப்பட எண்ணுகிறேன். அன்பர்கள் ஆலோசனைகளையும் அநுபவங்களையும் எழுதி எனக்குதவுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தும்பைப் பூ

மு. அருணாசலம், எம். ஏ., தியாகராயநகர்.

நம்நாட்டுப் பண்டைய நாகரிகத்தின் சிறப்பும் கலையின் சிறப்பும் நாளுக்கு நாள் குறைந்தும் மறைந்தும் வருகின்றன. இது மறுக்கமுடியாததோர் உண்மை. சாதாரணமான ஓர் அற்பத் தும்பைப்பூவை வைத்து, நம் பெரியவர்கள் பழங்காலத்திலே எவ்வளவோ அரிய உண்மைகளையும், கடவுள் தத்துவத்தையும் அனுபவிக்க முடிந்தது. நம்மால் இன்று அப்படி அனுபவிக்க முடிகிறதா? இல்லை.

தும்பை என்றால் இந்தக்காலத்திலே யாருக்குத் தெரியும்? நகரத்திலே நாகரிக வாழ்க்கை வாழ்ந்துவரும் நமது மக்களுக்குத் தும்பை யென்றால் கொஞ்சமும் தெரியாது. காட்டுப்புற வாழ்க்கையில் தோய்ந்து, அங்குள்ள மக்களோடும் இயற்கையோடும் ஒன்றி வாழ்பவர்களுக்குத் தும்பையைக் குறித்துக் கொஞ்சம் தெரியலாம். நேர்முகமாகத் தும்பையை அறியாதவர்களுங்கூட, ஒரு வகையிலே, வாழ்க்கையிலுள்ள வழக்காறுகளை யொட்டிச் சிறிது அறியக் கூடும்.

மிருதுவான சாதத்தைப் பார்த்து, "பூப்போலிருக்கிறது" என்று சொல்வது வழக்கம். அதேபோல, நன்றாய்த் தீட்டிய பழுப்பற்ற அரிசியினாலே சமைத்த சாதத்தின் வெண்மையைக் கண்டு வியந்து, 'சாதம் தும்பைப்பூப் போலிருக்கிறது' என்று அதன் வெண்மையையும் மென்மையையும் உள்ளடக்கிச் சொல்வதுண்டு.

நாட்டுப்புறத்திலே பலர், தங்கள் துணிகளைத் தாங்களே துவைத்து உலர்த்திக்கட்டும் பழக்கமுடையவர்களாக இன்னும் இருந்து வருகிறார்கள். (துணியினுடைய தூய்மைக்கும் அழுக்கின்மைக்கும் வண்ணானுடைய தயவை எதிர்பார்க்கிற வழக்கம் நாட்டுப்புறம் முழுவதும் இன்னும் பரவிவிடவில்லை.) இப்படித் தம் வேட்டியைத் தாமே துவைத்து உலர்த்துபவர், அதன் வெண்மையைக் குறித்துப் பெருமை பாராட்டிக்கொள்வது இயல்பு. முன்னெல்லாம் 'கிளாஸ்கோ-9000-மல்' கட்டியவர்கள் இப்போது கதர் உடுத்துகிறார்கள். கதர்த் துணியைத் துவைத்துக் கட்டுவதை இழிவென்றும் கருதுவதில்லை. என்னதான் அழுக்குப்பட்டிருந்தபோதிலும், கதர்த்துணியைத் துவைத்தவுடனே—அதுவும் ஒருவர் உற்சாகமாய்த் தம் வேட்டியைத் தாமே துவைத்தவுடனே—அழுக்கெல்லாம் விட்டுப்போய், 'தும்பைப் பூப்போல்' வெண்மையடைந்து விடுகிறதென்று பெருமையோடு சொல்லிக்கொள்வது இன்றைக்குக்கூடச் சாமானிய வழக்கு.

ஐந்தாறு வயதுடைய சிறு பையனாயிருந்தபோது, இந்த தும்பைப் பூவினிடத்தில் எனக்கு அதிக மோகமிருந்ததாக ஞாபகம். வீட்டிலிருந்த என் பாட்டி, கைக்குழந்தைக்குக் கொடுக்கும் மருந்தில் சேர்த்து அரைப்பதற்காகக் கொஞ்சம் தும்பைப் பூ எடுத்துக்கொண்டு வரும்படி சொல்வாள். இப்போது பட்டணத்திலே இந்த வேலைக்கு இடமேயில்லை; ஏனென்றால், குழந்தைக்கு வலியேற்பட்டாலும், அல்லது பசி யேற்பட்டாலுமே, டாக்டரிடம் கொண்டுபோய்க் காட்டிவிடுவது வழக்கமாய்ப் போய்விட்டது.

எங்கள் கிராமத்திலே, வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு திடல் இருந்தது. அங்கே இரண்டொரு தென்னை மரந்தான் உண்டு. தென்னை நிழல் விழாத இடத்திலே, தும்பைச் செடிகள் ஏராளமாக முளைத்துக்கிடக்கும். அவற்றிலே

அழகிய சிறு பூக்களும் மிகுதி; தும்பைப் பூவிலே சிறப்பாகக் குறிப்பிடுவதற்கு ஒன்றுமில்லை, மென்மையான பூ; தூவெண்மை நிறத்துக்குப் பேர் போனது. அதற்கென்று தனித்ததொரு நறுமணம் உண்டு. (இது மிகக் குறைந்த மணந்தான்) ஏதோ, மருந்துக்காகத் தும்பைப்பூ உபயோகப்படுமே யொழிய, மற்றப்படி, மனிதர் யாரும் இதைக் கவனிப்பதில்லை; ஏன், ஆடு மாடுகளே இதை மேய மாட்டா என்றால் அதிகம் சொல்லுவானேன்!

ஆனால், நான் மருந்துக்காகப் பூ வெடுக்கப் போகிறபோது, பூவெடுப்பதோடு நின்று விடுவதில்லை. பூவின் அடியில் ஒரு துளி தேனிருந்ததை எப்படியோ கண்டுகொண்டேன். ஒவ்வொரு பூவாக எடுத்து நாவில் வைத்து, அதன் அடியிலுள்ள தேனை உறிஞ்சுவதுண்டு. இந்த வேலையில் எனக்குப் போட்டியாக வண்ணாத்திப் பூச்சிகள் வந்துவிடும். பல நிறங்கொண்ட சிறகுகளோடு, வெண்மையான பூக்களுக்கும் பசுமையான இலைகளுக்கும் இடையில் இவை போய்த் தேனையுண்பது கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். இக் காட்சியில் நான் அதிக நேரம் ஈடுபட்டிருப்பதில்லை; வண்ணாத்திப் பூச்சிகள் எல்லாத் தேனையும் குடித்துவிடுமே என்ற பயம்! இவற்றைத் துரத்திக்கொண்டே, பூ எடுத்துக் கொண்டும் தேன் உறிஞ்சிக்கொண்டும், நான் நெடுநேரம் இருந்து விடுவேன். இதற்கிடையில், நான் திரும்பி வராதது கண்ட என் பாட்டியே இடனுக்கு வந்து விடுவாள். இப்படியாக, ஒவ்வொரு நாளும் எனது தும்பைப் படலம் முடிவடையும்.

இன்றைய நாகரிகத்திலே தும்பைக்கு இடமில்லாது போயினும், பண்டைய தமிழர் தும்பையை இதயத்தோடொட்டிப் பெரிதும் அனுபவத்திருக்கிறார்கள். அக்காலத்தில் அரசர்களிடையே அடிக்கடி போர் நடப்பதுண்டு. போரின் தொடக்கத்திலிருந்து முடிவாக ஒருவர் வெற்றி பெறுவது வரையுள்ள போர் நிகழ்ச்சிகளை வெவ்வேறு பிரிவுகளாகக் கொண்டிருக்கிறார்கள். இப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனிப் பெயர் கொடுத்து, அதற்கு அடையாளமாக, ஒரு பூவையும் அமைத்திருக்கிறார்கள். இருபக்கத்து வீரரும் கைகலந்து போரிடுவது 'தும்பைத்திணை' என்று பெயர் பெறும். 'அதிரப்பொருவது தும்பையாம்' என்பது பழைய பாடல். போர் செய்யும் வீரர்கள், தும்பைப் பூவைமட்டுமன்றி, அதன் பசுமையான இலையையும் சேர்த்துக் கட்டித் தலையிலும் மார்பிலும் மாலையாக அணிவார்கள். "பாசிலைக் கமழ் பூந்தும்பை நுதலசைத்தோன்" என்பது ஒரு புறப்பாட்டு. பகைவரோடு போர் செய்ய எண்ணிப் புறப்படும் போதும் தும்பைமாலை சூடுவதுண்டு. அரசர்கள் உண்மையான தும்பை மாலையோடுகூட, பொன்னாற் செய்த தும்பை மாலையும் அணிவார்கள். போரில் ஈடுபட்டோர் மட்டுமன்றி, இளமகளிரும் தும்பை மாலையை அணிவார்கள்.

தும்பையினுடைய மென்மையையும் வெண்மையையும் அனுபவித்த நம்மக்கள் அதன் தனிப் பண்பிலே கடவுளைக் கண்டார்கள். வெள்ளிய பனி மலையின் மீது அமர்ந்திருப்பதாகத் தாங்கள் கற்பனை செய்துள்ள சிவபெருமானுக்கே இந்த மலரை உரியதாக்கிவிட்டார்கள். ஆயினும், இது அற்பமான பூவாயிருத்தல் பற்றி, ஆலயங்களிலே சிவபெருமானுக்கு இப் பூவை அணிவிப்பது சாதாரணமாக இப்போது வழக்கத்திலில்லை. ஆனாலும், தும்பைப்பூவுக்கென்று சிறப்பாக ஓரிடம் இருக்கிறது. அதுவே, திருக்காளத்தி.

ஒருசமயம் சுவாமி தரிசனத்துக்காக நான் காளத்திக்குப் போயிருந்தேன். காலையிலே, மலைக்கு அப்பாலுள்ள கோனேரியிலும் பொன் முகரியிலும் ஸ்நானம் செய்து முடித்துக்கொண்டு, சில நண்பர்களும் நானுமாக ஆலயத்

துக்கு வந்தோம். அருச்சனைக்கு வேண்டிய தேங்காய், பழம், பூ முதலியன வாங்கிக்கொண்டு வருமாறு ஓர் அன்பரிடம் கூறினேன். அவரும் அப்படியே சென்று வேண்டியவற்றை வாங்கி வந்தார். வந்தவுடன் அவர் கையிலிருந்த தட்டைக் கவனித்தேன். அதில் என்ன பூ இருந்ததென்று ஆவலுடன் நோக்கியபோது, எனக்குப் பெருத்ததோர் ஆச்சரியமேற்பட்டது. அதிலிருந்த பூ, தும்பைப்பூ! இரண்டு முழ நீளத்துக்கு ஒரே மாலையாக, நெருக்கமாய்த் தொடுக்கப்பட்டிருந்தது. அதைக் கையிலெடுத்துப் பார்த்தபடியே, மற்றெல்லாரோடும் சேர்ந்து கோவிலுக்குள் போய்விட்டேன். உள்ளே சென்று, அருச்சனையெல்லாம் செய்துகொண்டு, கோயிலை வலம்வந்து, பிறகு வெளியே வந்தோம். என்னுடைய மனம், சுவாமியிலிடத்திலோ அருச்சனையிலோ ஈடுபடவில்லை. அருச்சனை முடிந்த பின் அருச்சகர் விபூதிப் பிரசாதம் கொடுக்கவில்லை என்பதையோ கையில் ஏதோ தீர்த்தந்தான் விட்டார் என்பதையோ அப்போது நான் கவனிக்கவில்லை. சுவாமிக்குச் சாத்தின தும்பைப்பூ ஒன்றிலேயே என் மனம் லயித்துவிட்டது.

ஒரு சில தும்பைப் பூக்களை எடுத்துச் சேர்ப்பதென்றாலே எவ்வளவோ நேரம் பிடிக்கிறது. ஆனால், காளத்தியிலே, எவ்வளவோ பூக்களை எடுத்துக்கொண்டு வந்து நாரிலே தொடுத்துச் சுவாமிக்குச் சாத்துவதற்கென்று வைத்திருக்கிறார்கள். விசாரித்ததில், தும்பைமாலை சாத்துவது காளத்திக்குரியதொரு சிறப்பான வழக்கமென்று தெரிய வந்தது. (இப்படியே திருச்செந்தூரிலும் முருகனுக்குத் தும்பைமாலையை மிக்க சிறப்போடு அணிவிப்பதுண்டாம்.) பூவினுடைய வெண்மையையும், மென்மையையும் பூ விற்கிற அந்த ஏழைமக்கள் அதை சேகரிக்கும் பொருட்டுப் பட்டிருக்கும் சிரமத்தையும் பார்க்கும்போது, அந்தச் சிறிய பூவையே கோவிலாகக்கொண்டு அதனுள்ளே காளத்திநாதன் வீற்றிருக்கிறான் என்று எண்ணவே தோன்றுகிறது. அந்த மாலையைப் பார்த்தவர்கள் யாரும் அதிலே காதல் கொள்ளாமல் இருக்கமுடியாது. எனவே, தும்பைப் பூ சிவபெருமானுக்கு உவப்பான மலரென்று சொல்வதில் எவ்வளவோ பொருளிருக்கிறது.

இதை எழுதும் போதும், என் மனம் காளத்தியிலுள்ள தும்பை மாலையைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு வருகிறது. இந்த மாலைக்காக வேண்டி ஒரு தரம் காளத்திக்கு யாத்திரை போகலாமாவென்றிருக்கிறது.

சிவபெருமானுடைய அருள் வேண்டுமென்று பெரிதும் உளங்கசிந்து பாடிய அதிவீரராம பாண்டியன்,

"தும்பை முடித்தோய்! புரக்க
இரக்கம் இன்னம் தோன்றாதோ?"

என்று ஒரு பாடலிலே வேண்டினார். மேலே கூறியவாறு தும்பை மலரிலே மனம் ஈடுபட நேர்ந்துவிட்டால், சிவபெருமானைத் 'தும்பை முடித்தவன்' என்றுகூறி இவ்வாசிரியர் குறையிரப்பதிலுள்ள நயத்தையும் கற்பனைச் சிறப்பையும் உள்ளவாறு உணர்ந்து ஆனந்திக்கலாம்.

விஞ்ஞானத்தின் சோதனை

ஆர். கே. விசுவநாதன், எம். ஏ.

மனிதன் பூமியில் தோன்றிய காலத்தில், மின்னல், இடி, பூகம்பம், வெள்ளம் முதலிய இயற்கை நிகழ்ச்சிகளைக் கண்டு திகிலடைந்தான். நாளடைவில் அச்சம் நீங்கி அவற்றைக் கவனிக்கலானான். தீ சுட்டபோதிலும் உணவுப் பொருள்களை வேகவைக்கவும், காட்டுமிருகங்களைத் துரத்தவும் பயன்படுவதை அறிந்தான். வெள்ளத்தினால் சேதம் ஏற்பட்ட போதிலும் தாகத்தைத் தணிக்க நீர்வேண்டியிருக்கிறது என்று கண்டான். இவ்வாறு அடைந்த அறிவை வாழ்க்கைக்குப் பயன்படுத்தி வரலானான். மீன் பிடித்தல், ஆடுமாடு வளர்த்தல், பயிரிடுதல் முதலியன கற்று வீடுகள் கட்டிக்கொண்டு கூட்டமாக வசிக்கத் தெரிந்துகொண்டான். காலக்கிரமத்தில் எழுதப்படிக்கவும், அவனவன் சேமித்த பொருள்களை மாற்றிக்கொள்ளவும் கற்றுக்கொண்டான். அறிவு வளர்ச்சியில் மேன்மேலும் ஈடுபட்டான். இவ்வாறு பல ஆண்டுகள் சென்றன.

பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து விஞ்ஞான அறிவு தழைத்து ஓங்க ஆரம்பித்தது. சுமார் நூற்றைம்பது வருஷங்களுக்குள் விஞ்ஞானம் அடைந்தவெற்றி நம் வாழ்க்கையை முற்றிலும் மாற்றிவிட்டது. நம் வேலைகளில் பெரும்பாலானவற்றை நீராவி, மின்சார இயந்திரங்களைக் கொண்டு நடத்தி வருகின்றோம். போக்குவரத்து சாதனங்கள், வியாபார வசதிகள் இவைகள் அதிகரித்து உலகத்திலுள்ள எல்லாப் பாகங்களும் ஒன்றோடொன்று நன்கு பிணைக்கப்பட்டன. பொதுமக்களின் வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றிலும் விஞ்ஞானம் நன்கு பரவலாயிற்று. தற்காலம் நாகரீக வாழ்க்கைக்கு அவசியம் என்று கருதப்படுகின்ற ஸோப்புகள், மோட்டார்கள், ரேடியோக்கள் முதலிய கணக்கற்ற பொருள்களை உண்டுபண்ணினார்கள். இதில் ஐரோப்பிய நாடுகளே முன்னணியில் இருந்து ஆசியாவிலுள்ள நாடுகளில் இச் சாமான்களை வியாபாரம் செய்யத் தொடங்கின. வியாபாரத்துடன் நாடுகளை வசப்படுத்திக் கொள்ளும் வேலையும் ஆரம்பமாயிற்று. இத்தொண்டில் ஐரோப்பிய நாடுகள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டன. அடிமைப்பட்ட நாடுகளும் விழித்துக்கொண்டன. எனவே உலகில் அமைதி கெட்டு எங்கும் கிளர்ச்சி ஏற்பட்டு வெடிகுண்டுகளாலும், விஷவாயுக்களாலும் மக்கள் இறந்து வருகின்றனர். இதற்கெல்லாம் காரணம் விஞ்ஞானம் என்று நினைத்து அதன்மீது பழியைச் சுமத்துவது இயல்பே. இதை தீர்மானிப்பதற்குமுன் விஞ்ஞானம் என்ன என்பதையும் அதைப் பயிலுவதால் நாம் அடையும் நன்மை தீமைகளையும் சற்று கவனிப்போம்.

விஞ்ஞானம் என்பது இவ்வுலகைப் பற்றியும், இயற்கையைப்பற்றியும் அறியப்பட்ட விஷயங்களை வகைப்படுத்திக் கூறுவதையே முக்கியமாகக்கொண்டது. பலநாடுகளில் பலகாலங்களில் அறியப்பட்ட இயற்கையின் இரகசியங்களைச் சலித்துப் பார்த்து அவற்றினிடையே பொதுவாயுள்ள அம்சங்களைத் தெரிந்து கொள்ளுகிறது. இவற்றைப் பரிசோதனைவாயிலாக நிரூபித்தபின்னரே பிறருக்கு எடுத்துக்கூறப்படுகின்றது. இதில் உணர்ச்சியின்பாற் பட்ட முடிவுகளும், அர்த்தமற்ற கொள்கைகளும் இடம்பெறா. எனவே நம்மிடையே தொன்றுதொட்டிருந்து வந்த பல கருத்துக்கள் இதனால் பாதிக்கப்பட்டன. மேலும் விஞ்ஞானம் இயற்கை நிகழ்ச்சிகள் ஏன் ஏற்படுகின்றன என்று கூறவில்லை. ஒருவரையறைக்குள் எவ்வாறு ஏற்படுகின்றன என்று அது கூற

முயலுகின்றது. விஞ்ஞானத்தில் "விதியியல் விஞ்ஞானம்" (Pure Science) என்றும், "வினையியல் விஞ்ஞானம்" (Applied Science) என்றும் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. விதியியல் விஞ்ஞானம் எனப்படுவது வினையியலைக் கருதாது இயற்கை நிகழ்ச்சிகள் ஏற்படும் மூலகாரணங்களைக் கண்டுபிடிப்பதை மேற்கொண்டிருக்கிறது; ஆனால் வினையியல் விஞ்ஞானம் மானிட வாழ்க்கைக்கு வேண்டிய புதுவகைச் சாதனங்கள் கண்டுபிடிப்பதை மேற்கொண்டிருக்கிறது. பாமரமக்கள் வினையியலையே நாடி, செயலின்பாற்பட்ட புதுச்சாதனங்களைக் கண்டுபிடித்த மார்கோனி, எடிஸன் போன்றவர்களுக்கும் வினையியலைக் கருதாது சிந்தனையின் பாற்பட்ட புதுக்கொள்கைகளைக் கண்டுபிடித்த நம் நாட்டின், சி. வி. இராமன். ருதர்போர்டு போன்ற விஞ்ஞானிகளுக்குமிடையே உள்ளவேற்றுமையை உணரமாட்டார்கள். வினையியல் விஞ்ஞானம் கேவலம் பணம் சம்பாதிப்பதையே முக்கியமாகக் கொண்டது. அறிவைப் பெருக்கும் ஆற்றலையே அடிப்படையாகக்கொண்ட விதியியல் விஞ்ஞானம் முற்சொன்னதைவிட மேம்பட்டது என்று உணரலாம். ஏனெனில் வினையியல் விஞ்ஞானம் வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களை இயற்றுவதைத்தவிர நாடுபிடிக்க அலையும் கொள்ளைக்காரர்களுக்கு வேண்டிய சாதனங்களையும் இயற்ற உபயோகப்படுகிறது. இது விஞ்ஞானத்தின் குற்றமாகாது. கெட்ட வழிகளில் விஞ்ஞானத்தைச் செலுத்தும் மனிதர்களே இதற்குக் காரணமாவார்கள் இதற்காக விஞ்ஞானம் வேண்டாம் என்று நாம் சொல்வது தவறாகும். விஞ்ஞானம் பயின்றாலன்றி இயற்கையை கண்டுவியப்படைவதைத் தவிர அதன் நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கண்டுபிடிக்க இயலாதுபோய்விடும். மேலும் இன்னும் சில நன்மைகளை இழக்கவேண்டி நேரிடும். விஷயங்களை ஆராய்ந்துதெளிந்த உண்மை எதுவென்று அறிய விஞ்ஞானம் நமக்கு வழிகாட்டுகிறது. இதுபோய்விடும். இஃதன்றி ஒரு விஷயத்தை ஒருவர் சொன்னார் என்று ஒப்புக்கொள்ளாமல் பரிசிலனை செய்த பின்னரே அதை மேற்கொள்ளவேண்டுமென்ற நியதி, பொறுமை, ஊன்றிக் கவனித்தல் முதலிய நற்குணங்களைப் பெற இடமில்லாமலும் போய்விடும். மிகப்பெரிய வானவியல் நிகழ்ச்சிகளிலிருந்து அதிநுட்பமாய் உள்ள அணுக்களிடையே ஏற்படும் நிகழ்ச்சிகள் வரை கண்காணித்து இயற்கை அன்னையின் பெருமையையும் அழகையும் வெளிப்படுத்துவதும் அசாத்தியமாகும். எனவே நல்வாழ்க்கையைச் சீரிய நோக்கமாகக் கொண்ட நாம் மேலும் மேலும் விஞ்ஞானத்தைப் பயிலவேண்டும். ஆனால் விஞ்ஞானம் விரவிய வாழ்க்கைக்கு ஏற்ற அறநெறி நிறுவப்பட்டால் அன்றி ஹிட்லர், முஸோலினி போன்ற அசுரர்கள் விஞ்ஞானத்தைக் கெட்டவழியில் உபயோகிப்பதைத் தடுக்க முடியாது.

சந்தாதாரர்களுக்கு

பாரதமணி இதழ்கள் உரிய காலத்தில் வந்து சேராவிட்டால், அந்தந்த ஆங்கிலமாத முடிவுக்குள் தெரிவிக்க வேண்டும். இல்லாவிடில் காரியாலயத்தார் ஒன்றும் செய்ய முடியாதென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

'பாரதமணி' காரியாலயத்தார்.

ஆகாரச் சீர்திருத்தம்

ராவ்பகதூர் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி

இந்தியா தேசம் ஒரு கண்டம் என்றே சொன்னால் அது மிகை யாகாது. பரத கண்டம் அல்லவோ இது? சில வருஷங்களுக்கு முன்பு இந்தியப் பத்திரிகை ஒன்றில் ஒரு படம் போட்டிருந்தது. ஐரோப்பா கண்டத் தில் உள்ள பலநாடுகளைத் தனித்தனியே படமாகப் பிரித்து அவைகளை இந்தியா தேச படத்தில்(Zig zag puzzle)மாதிரி யாக அமைத்து வரையப்பட்டிருந்தது. அதில் தெரிவிக்கப்பட்ட விஷயம் என்ன வென்றால் இந்தியா தேச விஸ்தீரணம் ருஷ்யா நாட்டைத்தவிர மற்ற நாடுகளை எல்லாம்கொண்ட ஐரோப்பா கண்டத் தின் விஸ்தீரணத்தைப்போல அவ்வளவு பெரியது.

விஸ்தீரணத்தில் மாத்திரம் அல்ல இந்தியா தேசத்தின் முதன்மை. எல்லா விஷயங்களிலும் அதிக சிறப்பும் அதிக சிறுமையும் ஒருங்கே இதில் பார்க்கலாம். உலகத்தில் இருக்கும் மலை களில் எல்லாம் உயர்ந்த இமயமலையும், மிகப் பரந்தஇடைவெளிகளும்,பொறுக்க முடியாத உஷ்ணமும், அதிகப்பட்ட மழையும் இந்தியாவிலேதான்.

மிருகவர்க்கங்கள், தாவரவர்க்கங்கள், மானிட ஜாதிகள், அவர்கள் நடை, உடை, பாவனைகள், பழக்கவழக்கங்கள், உணவுப் பொருள்கள், உண்ணும் முறைகள், மதங்கள், கொள்கைகள், பாஷைகள், இவைகள் எல்லாவற்றிலும் இப்படிப்பட்ட உயர்வையும் தாழ்வை யும் காணலாம். பெரிய தேசம் ஆகை யால் சீதோஷ்ண நிலை ஒவ்வொரு பாகத்திலும் வேறுபட்டிருக்கின்றது. இவ் வேறுபாட்டால் அவ்விடங்களில் விளையும் தானியங்கள், பருப்பு, கடலை, கொட்டை வகைகள், காய்கறிகள், பழ தினுசுகள், பலவகைகளாக இருக் கின்றன. மிருக, பக்ஷி, மீன் வகைப் பட்ட உணவுப்பொருள்களும், இடங் களுக்குத் தக்கபடியே தான். ஊன் உணவுப் பொருள்களையும், தானியம், மரக்கறி உணவுப் பொருள்களையும் சாப்பிடத் தயாரிக்கும் விதங்களும் மாறுபட்டனவே. மலைப் பிரதேசங் களில் நாகரிகம் குறைந்த மக்கள் உண்ணும் ஆகாரம் ஒரு தினுசு, நகர வாசிகள் புசிக்கும் ஆகாரம் முற்றிலும் வேறு வகைப்பட்டது. ஆகையால், பெரும்பாலும் சீதோஷ்ண ஸ்திதியை யும், நாகரிகத்தையும் பொருத்தே மக் களின் ஆகாரமும் ஏற்பட்டு வெகு காலமாக வழங்கி வந்திருக்கிறது.

காலத்திற்கும், நாகரிகத்திற்கும், சமய கொள்கைக்கும் தக்கபடி அவ்வப் பொழுது மாறுதல்களும் ஏற்பட்டு வந்திருக்கவேண்டும். இப்பொழுதும் அம்மாறுதல்கள் தோன்றி வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம். உணவுப் பொருள்களிலும் புதியவை புகுந்திருக் கின்றன. தக்காளிப்பழமும் (Tomato) டச்சுக்காரர்கள் முதலில் உபயோகித்த 'காரட்' (Carrot) என்ற கிழங்கும், மத்தியதரைக்கடல் ஓரப்பிரதேசங்களில் வளர்ந்த பீட்ரூட் (Beet Root) கிழங் கும், 18-ம் நூற்றாண்டின் முதலில் மனித உணவாகக் கொள்ளப்பட்ட உருளைக்கிழங்கும் (Potato) இவை போன்ற பல வஸ்துக்கள் நம் தேசத் திலும் பயிர் செய்யப்பட்டும், ஆகார மாக உபயோகிக்கப்பட்டும் வந்திருக் கின்றன.

திருச்சி ரேடியோ நிலயத்தில் 1—11—42-ல் பேசியதைச் சிறிது விஸ்தரித்தெழுதப் பெற்றது இது.

ஆகாரங்களைச் சாப்பிடுவதற்குத் தயாரிப்பதிலும் அநேக மாறுதல்களைக் காணலாம். இயந்திரங்கள் ஏற்படுவதற்கு முன்பாக கோதுமையையும், நெல்லையும் குத்தி உமி நீங்கிய முழு தானியங்களாகவே உபயோகித்தார்கள். இப்பொழுதோ வெண்மையாக தீட்டிய கோதுமையும், அரிசியும், வெளுத்த கோதுமை மாவும், அரிசி மாவும் தயாரித்து எங்கும் அனுப்பப்பட்டு உபயோகமாகின்றன. பாலைப் பொடியாகவும், காய்கனிகளை புட்டிகளில் கெடாமல் அடைத்தும் பலவகைப்பட்ட ஆகாரங்களை குழந்தைகளுக்கும், வியாதியஸ்தர்களுக்கும், டப்பாக்களிலும், புட்டிகளிலும் நிறைத்தும் வேறு தேசங்களினின்று இத்தியாவில் இறக்குமதி ஆகிறது.

இம் மாறுபாடுகளெல்லாம் நாகரிக வாழ்வில் வந்துவிட்டபோதிலும், அவைகளால் நமக்கு நன்மை உண்டாயிற்று, அல்லது தீமை விளைந்ததா என்ற சர்ச்சை சில வருஷங்களாகப் பல தேசங்களில் நடந்துகொண்டிருக்கின்றது. இந்த சர்ச்சை செய்யும் இடங்களை ஜீவசத்துப் பரிசோதனை கூடம் Nutrition Research Institute என்பார்கள். இந்தமாதிரியான ஸ்தாபனம் ஒன்று நம் மாகாணத்திலும் நீலகிரி மலையில் குன்னூரில் இருக்கிறது. அங்கே ஆராய்ச்சியாளர் கண்ட பல உண்மைகளை பத்திரிகைகள், புஸ்தகங்கள் சொற்பொழிவுகள் மூலமாக வெளியிட்டு வருகிறார்கள். துண்டுப்பிரசுரங்கள் அச்சிட்டும் விளம்பரம் செய்கிறார்கள்.

மற்ற தேசங்களில் ஆகார விஷயமாக என்ன என்ன சீர்திருத்தங்கள் செய்திருக்கின்றார்கள், என்னவிதத்தில் நம் தேசமக்களின் உணவு அளவிலும், குணத்திலும், சத்திலும் குறைவுபட்டு இருக்கிறது, எம்முறைகளைக் கையாண்டால் நாம் நோயற்ற வாழ்விற்கு அடிப்படையாக வேண்டிய உணவுப்பொருள்களை விருத்தி செய்யலாம், எவ்விதம் சீராய் அமைந்த நிறைந்த உணவு (Balanced Diet) இருக்கவேண்டும் என்கிற விஷயங்களை கவனிக்கவேண்டியது அத்தியாவசியமானது.

மற்ற தேசங்களைவிட இந்தியாவில் இந்த விஷயங்களை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். ஏனெனில், அறியாமையிலும் படிப்பின்மையிலும் முதல் ஸ்தானம் பெற்றது இந்தியா. 85% ஆண்மக்கள், 90% பெண்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். இங்கு முக்காலே மூன்றுவீசம்பேருக்கு தினத்தில் ஒரு நல்ல சாப்பாடுகூட கிடையாது. தரித்திரத்திற்குப்பேர்போனது, வியாதிக் கணக்கில் மேம்பட்டது. இந்திய Director General of Medical Services ஆக இருந்த Sir John Megard என்பவர் தம் ஆராய்ச்சியில் கண்டதாவது:—41% மக்கள் போஷணையில் மிகவும் குறைவுபட்டும், 21% ஆகாரக் குறைவால் க்ஷீணித்தும் இருக்கிறார்கள். அதாவது, இந்த 62% மக்களும் சதா பசியால் வருந்துகிறார்கள். வருஷந்தோறும் 5 முதல் 10 கோடி ஜனங்கள் மலேரியா வியாதியாலும், 20 லக்ஷம் ஜனங்கள் கொடிய க்ஷயரோகத்தினாலும் பீடிக்கப்படுகிறார்கள். ஆகாரக் குறைவால் உடல் உறுதி மிகவும் தளர்ந்து இருக்கிறது. ஆகையால் வியாதியைத் தடுக்க உடலில் சக்தி இல்லை. சிசு மரணம் ஏராளம். இங்கிலாந்தில் பிரசவத்தினால் தாய்மரணம் 1000-ல் 4, இந்தியாவிலோ 24.5; இங்கிலாந்தில் ஆயிரத்தில் 11பேர் மரணக்கணக்கில். இந்தியாவில் 26 பேர். ஒரு மனிதனின் சராசரி ஆயுள்நாள் இங்கிலாந்தில் 55 வருஷம், இந்தியாவிலோ 25 வருஷம். இவையெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால், தரித்திரத்தாலும் போதிய உணவு இன்மையாலும் உடலில் உறுதி குறைந்து, வியாதிகள் பரவி அநேக ஜனங்கள் யமனுக்கு இரை ஆகிறார்கள். இந்தியாவில் ஆகார சீர்திருத்தம் மற்ற எல்லாச் சீர்திருத்தத்திற்கும் முன்னதாகவே கவனிக்க வேண்டிய விஷயம்.

இந்தியாவின் பிற்போக்கிற்கு பலவித காரணங்கள் உண்டு. இதற்கு ஒரு பெரிய காரணமாக இருப்பது ஆகார வசதிகள் குன்றியிருப்பதும், சத்து இல்லாத ஆகாரத்தை தவிர நல்ல ஆகாரத்திற்கு கதியற்றுஇருப்பதுந்தான். ஆகார சீர்திருத்தத்திற்கு பலவழிகளில் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அரசாங்கத் துறையில்தான் இந்த சீர்திருத்தத்தை அரசாங்கத்தின் பல இலாக்காக்களின் மூலமாகவும் அவர்கள் ஒத்துழைப்பாலும் நடவடிக்கையில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். அரசாங்கம் இந்த விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொள்ளாவிட்டால் சமூகத்தில் ஒன்றும் நடக்காது. சர்ச்சை செய்து அறிந்து கொண்ட உண்மைகளை அமுலுக்குக் கொண்டுவராவிடில் சர்ச்சையின் பயன் ஒன்றும் இல்லை. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா? மந்திரத்தால் மாங்காய் விழாது. வெறும் பேச்சில் பிரயோசனமில்லை.

உதாரணமாக, ஒரு அரசாங்க அறிக்கையில் வங்காளத்தில் விவசாயிகளில் பெரும்பாலர் சாப்பிடும் உணவானது எலிகளுக்குக்கூட தக்க போஷணையைத் தரும் உணவல்ல என்று எழுதப்பட்டிருக்கிறது. ஒரு ஆங்கில வைத்திய ஆராய்ச்சியாளர், ஒரே வயது, நிறை உடைய வெள்ளை எலிகளுக்கு இந்தியாவின் வெவ்வேறு மாகாணங்களில் மக்கள் சாப்பிடும் உணவுகளைக் கொடுத்து 80 நாட்களுக்குப் பிறகு அந்த எலிகளை தராசில் நிறைபோட்டுப் பார்த்தார். அப்பொழுது சீக்கியர்கள் உணவைச் சாப்பிட்ட எலிகள் 235 (Grams) பட்டான்கள் உணவுக்கு 230 (Grams) மராட்டியர் உணவுக்கு 200 (Grams) கன்னட நாட்டினர் உணவுக்கு 185 (Grams) வங்காள தேசத்து உணவுக்கு 180 (Grams) மதராஸ் மாகாணத்தினர் உணவுக்கு 155 (Grams)ஆக எடையில் கணக்கிடப்பட்டன. இதிலிருந்து தெரிந்துகொண்டது என்ன? இந்தியாவில் நல்ல உணவு சீக்கியர்களும், எல்லாவற்றைக்காட்டிலும் முழுமோசமான உணவு நம் மாகாணத்தியவரும் சாப்பிடுகிறார்கள் என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியவில்லையா? மேலும், சீக்கியர்களின், பட்டான்களின் உயரத்தையும், திடகாத்திரத்தையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறோம். மதராஸிகளின் வற்றி வரண்ட தேக நிலையைக்கண்டு இரங்காதவர்கள் யார்?. பார்த்தாலே தெரிந்துவிடுகிறது, இந்த ஆசாமி எவ்விதமான உணவை சாப்பிடுவதாக இருக்கும் என்று. 'உண்டார் மேனியைக் கண்டால் தெரியும்' என்று சொல்லும் பழமொழியின் உண்மை வைத்திய சாஸ்திரத்தில் கண்ட உண்மையே. இவன் மதராஸி என்று முகத்தில் எழுதி ஒட்டியிருப்பது போல் காணப்படுகிறான்.

இந்தியாவில் 100-க்கு 89 பாகம் கிராமங்களே. 7 லக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன. 30 கோடிகள் கிராமவாசிகள். ஜனத்தொகையில் மூன்றில் ஒருபங்கு 500 மக்களுக்குக் குறைந்த ஜனத்தொகை உள்ள குக்கிராமங்களில்தான் வாசம். இந்தியர்களின் முக்கிய தொழில் விவசாய பண்ணைதான். இந்தியாவின் உயிர் விவசாயமே. இந்தியாவின் தீர்க்க முடியாமல் இருக்கும் பிரச்னையும் விவசாயமே. விவசாயப் பண்ணையே முதன்மைபெற்ற சீரிய தொழில் என்று கருதுவது நம் தேசத்தில்தான். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்றார் திருவள்ளுவர். விவசாயத்தைக் காட்டிலும் சிறந்த தொழில் இல்லை என்று கருதி வந்தவர்கள் இந்தியர்கள். திரு. அ. ஆறுமுகம் இயற்றிய 'உழவர் புகழில்' ஒரு பாட்டைப் பார்ப்போம்.

பயிர் வகைகள் வயல் எங்கும்
[பச்சைப்பசேல் எனவே
வளர்ந்தோங்கி, தானியங்கள்
[வளமோங்கி, விளையும்
எயில்பொருந்தும் நகரத்தார்
[அவையுண்டுவாழ்வார்
உயிரோம்பும் அவர்பணியே
[உயர் பணியாம், மாதே!

பிறர் செய்யும் பணிகளெல்லாம் தொழுது உண்ணும் பணிகளாகக் கருதினர். கூழ் குடித்தாலும் திருப்தியும் மனநிம்மதியும் நிறைந்திருந்தது அவர்களிடத்தில். உழும்பணியால் கிராமத்தில் குடியானவர்கள் பெற்ற இன்பம் மன்னவரும், புரவலரும், பிறரும் கண்டறியார்கள். இப்படி இருந்தது முன் காலத்தில். உணவுப் பொருள்களை எராளமாகப் பண்ணையிலும், தோட்டத்திலும், காட்டிலும், மேட்டிலும், பயிரிட்டனர். பணமே பிரதானமாக எற்றுமதி செய்வதற்காகவே ஆகாரத்திற்கு உதவாத பயிர்களை வளர்க்கவில்லை. இயற்கையை ஒட்டி நல்ல பழக்கவழக்கங்களையும் ஆகார நியமங்களையும் கையாண்டனர். நீண்டகாலம் உயிர் வாழ்ந்தனர். எல்லாம் கதையாய்ப் போய்விட்டது. இப்பொழுது நவநாகரிகம் தலைகீழ் வியாபாரம்தான்.

ஆகாரத்திற்குப் போதுமான தானியம், கடலை, உளுந்து, பயறு, ராகி, கம்பு, சோளம் முதலிய பயிர்களை வளர்ப்பதில்லை. ஜனத்தொகை பிரம்மாண்டமாக அதிகரித்துவிட்டது. தரித்திரம் அதிகரித்தால் குடும்பமும் விருத்தியாகும் போல் இருக்கிறது. குசேலருக்கு அருள்செய்ய, சம்பத்து அளிக்க, ஸ்ரீ கிருஷ்ணன் இருந்தார். குசேலர் ஸ்திதியில் இருக்கும் இந்தியாவுக்கு யார் நல்ல கதிக்கு ஆசீர்வாதம் செய்யப்போகிறார்? மதியாலேதான் ஒருவாறு விதியை வெல்ல முடியும்.

அரசாங்க முறையில் என்னென்ன முறைகளில் விவசாயச் சீர்திருத்தங்களை அமைக்க வேண்டும் என்ற விஷயத்தைப் பற்றி நான் பேசப்போவதில்லை. எந்த முறைகளைக் கையாண்டால் அதிகமாக உணவுப் பொருள்கள் உண்டாக்கலாம் என்பதைப்பற்றியும் நான் பேசுவதாக உத்தேசம் இல்லை.

ஆகாரமும் போஷணையும் அதிகப்படி குறைந்து இருந்தது. இந்த மகாயுத்தத்திற்கு முன் பல வருஷங்களாக ஆகார விருத்தியில் இந்தியா ஒன்றும் பிரமாதமாக செய்துவிடவில்லை. ஆனால் இங்கிலாந்திலும், ஜெர்மனியிலும் அவரவர்கள் அரசாங்கம் இந்த யுத்தத்திற்கு முன்பாகவும், யுத்தம் ஆரம்பித்து இந்த மூன்று வருஷங்களுக்குள்ளும் நடவடிக்கையில் கண்கூடாகச் செய்திருக்கும் சீர்திருத்தங்களிலிருந்து தெரியவருகிறது. Sir John Russel என்ற பெரிய ஆராய்ச்சியாளர் 'யுத்த காலத்தில் இங்கிலாந்தின் ஆகாரம்' என்ற ஒரு சிறு நூலை வெளியிட்டிருக்கிறார். [Britain's Food in war time by Sir John Russel-Oxford pamphlets on world affairs servies] இது எல்லோரும் படிக்கவேண்டிய நூல். மற்றைய தேசங்களில் நடத்திவரும் சீர்திருத்தங்களைத் தெரிந்துகொண்டுதான், நம் தேசத்திற்கு ஒத்தவாறு அவைகளை நாம் அமைத்துக் கொள்ளவேண்டும்.

விவசாய விஷயங்களில் சென்ற பெரிய யுத்தத்திலும் அதற்குப் பிறகும் அனேக சீர்திருத்தங்களை இங்கிலாந்தில் அமுலுக்குக் கொண்டு வந்திருந்தும், இந்த மகாயுத்தம் ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கலாம் என்பதாக, முன்னதாகவே ஜாக்கிரதையாக உணவு பொருள்களைத் திரட்டிச் சேர்க்கவும், பண்ணைகளை புதிய முறையில் வளர்க்கவும், அதிகமாக தானியங்களைப் பயிரிடவும், பால், மரக்கறி, வெண்ணெய், பழம் முதலான சத்துணவுகளைப் போதிய அளவு பெருக்கவும் பல வழிகளை கையாண்டிருக்கிறார்கள்.

ஆகாரத்தை ஆதாரமாக கொண்டுதான் யுத்தத்தில் சேனைகள் நடக்கவோ, ஓடவோ, பறக்கவோ, சண்டை போடவோ முடியும். சேனைகளுக்கு வேண்டிய உடை, உணவு ஆயுதங்கள், இவைகளைத் தயாரிக்க, சேனையில் கலவாத மற்ற வயதுவந்த ஜனங்கள் அனைவரும் யுத்த சாதனத்திற்காக எதாவது ஒரு வேலையில் கலந்து கொள்ள நேருகிறது. இவர்களுக்கும்

நல்ல ஆகாரம் இருந்தே தீரவேண்டும். சமாதான அமைதி காலத்தைவிட யுத்த காலத்தில் ஆகாரத்தைப்பற்றி அதிக கவனம் செலுத்துவது அவசியம்.

தோல்வியும், வெற்றியும் ஆகாரத்தை பெரும்பாலும் தொடர்ந்து இருக்கிறது. இயந்திரங்களை நடத்த, ஆயுதங்களைக் கையாள, படைக்கலங்களை உபயோகிக்க உடல் உறுதிகொண்ட மக்களை பொறுத்தே இருக்கிறது. படைவீரர்களுக்கு சாமான்ய ஜனங்களைவிட அதிகமாகவும் சத்துள்ளதாகவும் இருக்கும் ஆகாரம் தேவை. போக்குவரவு சாதனங்கள் யுத்த காலத்தில் மிகவும் குறைந்துபோகும். பகைவர்களால் அழிக்கப்படும். போதிய அளவு பயிர்செய்ய மக்கள் குறைந்தும் போகும். சர்க்கரை இல்லா கஷ்டத்தையும், அரிசிக் குறைவினால் உண்டான திண்டாட்டத்தையும் நாம் இப்பொழுது கண்கூடாகக் காண்கின்றோம். விலைவாசி விஷம்போல் ஏறிவிட்டது. ஏற்கனவே ஏழைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உணவுப் பஞ்சம் சீக்கிரம் ஏற்படலாம். பர்மா அரிசி இறக்குமதி குறைந்துவிட்டது. இந்த நாட்டு அரிசி சைன்யங்களுக்கு வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டிருக்கிறது. இலங்கைக்கும் அனுப்ப ஏற்பாடுகள் ஆயிருக்கிறது. இன்னும் என்ன என்ன விதமான ஆகாரத்திண்டாட்டங்கள் ஏற்படுமோ சொல்ல முடியாது. கஷ்டம் உண்டாகத்தான் செய்யும். உலகமே தவித்துக்கொண்டிருக்கிறதே.

இந்த நிலையில் நாம் நம்மைப்பொருத்த மட்டில் என்ன—முறைகளில் சீர்திருத்தங்களை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று பார்ப்போம்.

1. தரிசு நிலங்களை எல்லாம் பாடுபட்டுப் பயிராக்க வேண்டும்.

2. வீட்டில் புறக்கடைகளிலும், வீட்டைச்சுற்றி இருக்கும் காலி நிலங்களிலும் உணவுக்கு உபயோகப்படும் செடிகொடிகளை வைத்து வளர்க்க வேண்டும்.

3. (Cash Crops) பணத்திற்கு மாற்றும் பொருள்களைச் செய்யாமல் அந்த பூமிகளில் (Food Crops) உணவுக்கு வேண்டிய தானியங்களைப் பயிரிட வேண்டும்.

4 வியாதியாலும், பூச்சி புழுக்களாலும் பயிருக்குச் சேதம் உண்டாகாமல் காப்பாற்றவேண்டும்.

5. வரிகளைக் குறைக்கவேண்டும்.

6. நீர் பாய்ச்சல், வசதிகளை பன்மடங்கு பெருக்க வேண்டும்.

7. மிருகம், பட்சி, முயல் முதலிய பிராணிகளால் பயிர் அழிபடாமல் காப்பாற்றவேண்டும்.

8. சேகரித்து வைத்த தானியங்களை எலி, அணில், முதலிய பிராணிகளின் படையெடுப்பினின்றும் காக்கவேண்டும்

9. யுத்த சிக்கனத்தில், உணவை வீண் செய்யாமல் இருப்பது ஒரு தர்மமாகவேக் கருதவேண்டும்.

10 வளவனுயினும் ‘அளவு அறிந்து உண்’ ‘மீதூண் விரும்பேல்’ என்ற முதுமொழிகளை ஆகாரப் பிரியர்கள் மறக்கக்கூடாது.

11. யுத்த காலத்தில் சாப்பாட்டு ராமன்களுக்கு இடம் இல்லை. உண்டி சுருக்குதல் பெண்டிற்கு மாத்திரமே அல்லாமல் ஆடவர்க்கும் அழகுதான். ஆயினும் ஆசைபோட்டு அழிக்கக்கூடாது. ஊனுக்கு அடிமையாகக்கூடாது.

12. யுத்த காரணமாக அரசாங்கத்திலும், சமூகத்திலும் மாறுதல்கள் ஏற்படுவதுபோல ஆகார விஷயத்திலும் மாறுபாடுகள் ஏற்படத்தான் செய்யும். அம்மாறுபாடுகள் நம் நலத்திற்குத் திருத்தி அமைக்கப்படவேண்டும்.

13. 'பகிர்ந்து உண்' என்பது இந்து தர்மம். இருக்கும் உணவுப் பொருள்களை சிலரே திரட்டி ஒளித்து வைத்துக் கொள்ளாமல்,பலருக்கும் பயன்படும்படி பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். இதற்குதான் (Food Rationing) என்று பெயர். முக்கியமாக வேண்டிய உணவுப் பொருள்களை எல்லாம் பகிர்ந்து கொடுத்தால் ஒழிய பஞ்சமும், கலகமும் கொள்ளையும், வியாதியும் சமூகத்தைச் சின்ன பின்னமாக்கிவிடும். யுத்தத்திலும் அபஜெயமே சம்பவிக்கும்.

14. மில் அரிசியை ஒழிக்க இது தான் சமயம். அதிகமாகத் தீட்டி அரிசியை வெளுக்கும்படி செய்யக் கூடாது என்று சட்டம் ஏற்பட வேண்டும். மில்லில் தீட்டிய அரிசியால் ஜனசமூகத்தின் தேக ஸ்திதி, பலவிதத்திலும் கெட்டிருக்கிறது என்று பல வருஷங்களாகத் தெரிந்தும், அதை அரசாங்கம் இதுவரை தடுத்தபாடில்லை. இந்த சட்டத்தை முதல் முதலில் இந்தியாவில் ஏற்படுத்தியது திருவாங்கூர் சமஸ்தானத்தில்தான். அந்த சமஸ்தான மகாராஜாவையும், மகாராணியையும், திவானையும், அவர்கள் செய்த மகோன்னதமான நன்மைகளுக்கு இந்தியர் என்றும் நன்றிபாராட்டக் கடமைப் பட்டவர்களாக இருப்பார்கள்.

15. தீட்டாத அரிசியும், கைக்குத்து அரிசியும் புழுங்கல் அரிசியும் அதிகமாக உபயோகப்படுத்தவேண்டும். சாப்பிடப் போதுமான அரிசி கிடைத்த காலத்தில் தீட்டாத அரிசி சமையலில் அதிக அளவு அன்னமாகக் காணும். மேலும் தீட்டாத அரிசியில் சத்துப்பொருள்கள் குறைந்து போகாமல் இருக்கும்.

16. அரிசியை அதிகமாக ஜலத்தில் களையாமலும், கஞ்சியை வடிக்காமலும் அன்னத்தைத் தயாரிக்க வேண்டும். பல தடவை அரிசியைத் தண்ணீர் விட்டுக் கழுவுவதனாலும், அதிக நீர் வைத்து சமைத்துப் பிறகு கஞ்சியை வடிப்பதனாலும், கழுநீரிலும், கஞ்சியிலும், எல்லா உப்புப் பொருள்களும் சத்துப்பொருள்களும் போய் விடுகின்றன.

17. அரிசி குறைந்து இருக்கும் காலத்தில் மற்ற தானியங்களை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. கம்பு, சோளம், ராகி இவைகளெல்லாம் மில் அரிசியையும், கைக்குத்து அரிசியையும்விட அதிக சத்துள்ள தானியங்கள். இந்த தானியங்கள் மில்லில் தீட்ட முடியாத பொருள்கள். முழுதானியங்களையே உடைத்துச் சமைக்கிறார்கள். ஆகையால், இவைகளில் ஏதாவது ஒரு தானியத்தை அரிசியே ஆகாரமாகக் கொண்டவர்கள் இப்பொழுது உபயோகிப்பது நலம். இந்த தானியங்களைச் சாப்பிடுவது இழிவு என்று எண்ணுவது தப்பு எண்ணம். அவைகள் அரிசியை விட புஷ்டி உணவு சத்துக்கள் நிறைந்த தானியங்கள்.

18. அரிசி சாப்பிடுபவர்கள், பருப்பைப் போதுமான அளவு உபயோகிப்பதில்லை. மீன்சாப்பிடாதவர்கள் பருப்புகளைக் கட்டாயமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும். விவசாய இலாகாகாரர்கள் பருப்பு வகைகளை அதிகம் பயிர் செய்ய விவசாயிகளைத் தூண்டி அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்ய வேண்டும்.

19. நமது மாகாணத்தில் அனேக ஜனங்கள் பால் குடிப்பதே கிடையாது. அரிசி உணவில் உள்ள குறைகளை பால், தயிர், மோர் முதலியவைகளைக்கொண்டு தான் சைவ உணவுக்காரர்கள் தீர்த்துக் கொள்ள முடியும்.

20. உணவு சீராய் அமைவதற்கு கீரை, காய்கறி, பழம் இவைகளை தினம் சாப்பிடவேண்டும். ஸ்ரீமான் சுவாமி சுத்தானந்த பாரதியார் இயற்றிய 'உடல் உறுதி' என்ற நூலையும், ஸ்ரீமான் எஸ். ஆர். வேங்கடராமன் வெளியிட்ட 'கைகுத்தரிசியும் மில் அரிசியும்' என்ற நூலையும் எல்லோரும் வாசித்தால் நன்மை உண்டாகும்.

கப்பலோட்டிய தமிழன்

சென்னை வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி

கப்பலோட்டிய தமிழன் என்னுடைய ஆப்த நண்பரில் ஒருவர். எனக்கும் இவருக்கும் முப்பது வருஷகாலப் பழக்கமுண்டு. இவர் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் உழைத்த தேச பக்த சிலர்; தமிழ் மொழியில் செய்யுளியற்றவும், செய்யுளுக்கு உரை எழுதவும், பிறருக்குப் பாடஞ் சொல்லவும் வல்லவராய் விளங்கியவர். ஆதலால் இவருடைய நேசம் பக்தனுடைய உள்ளத்தில் பரமாத்மாவின் நேசம்போல் என்னுள்ளத்தில் இடையறாது வளர்ந்து கொண்டே இருந்தது. இன்னும் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

இத்தகைய நேசத்துக்கு இருப்பிடமான இவர், என்னை இயக்கும் அறிவைப்போல் என் மனத்திலிருந்து தம் வீரச் செயல்களை அடிக்கடி ஞாபகமூட்டி என்னைப் **பொதுநலப்பணியில்** ஈடுபடுத்துகிறவரானார்; ஸ்தூல தேகத்தை அளித்த அன்னையினிடம் கொள்ளும் **அன்பு** தாய் நாட்டினிடமும் கொள்ளவேண்டுமென்கிற உயரிய உணர்ச்சியை வளர்ப்பவரானார்.

“மக்களின் அகத்தின் நிலையிலிருந்து அவர்களுடைய வாழ்வின் நிலைமைகள் வளர்கின்றன. நினைவுகள் அவர்களுடைய செயல்களாக மலர்கின்றன. மக்கள் இவற்றை அறிவார்களானால், அவர்கள் பிறர் இயக்க இயங்கும் யந்திரம்போல் சுதந்திரமற்ற நிலையிலிருக்கமாட்டார்கள். தங்கள் மனத்தை ஆள்வதற்கும் தங்கள் கொள்கைக்குத் தக்கபடி தங்களைத் திருத்திக்கொண்டு நடப்பதற்கும் வேண்டிய சுதந்தரசக்தி தங்களிடம் விளங்கக்காண்பார்கள்; தாங்கள் சுதந்தரர் என்பதை உணர்வார்கள். அங்ஙனம் உணருங்காலத்தில் அவ்வுள்ளத்தில் உற்சாகமும் ஊக்கமும் ஊற்றுப் பெருக்கெனப்பெருகும். அவை பெருகும் காலத்தில் அவர்கள் அடிமை வாழ்க்கையை வெறுப்பார்கள்” என்று பன்முறையும் ஞாபகமூட்டி என்னை அடிமை வாழ்க்கையில் மயங்கி உழலாவண்ணம் காப்பவரானார்.

ஆஹா! இவருடைய காம்பீரிய உருவமும் கருத்தைக் கவர்ந்து தேசபக்தியில் ஈடுபடுத்தும் வாக்கு சாதுரியமும் என் முன் இப்போதும் விளங்குகின்றன. இந்த உத்தமர் சர்க்காரால் கொடுக்கப்படும் திவான்பகதூர், ராவ்பகதூர் முதலிய பட்டப் பெயர்களுக்கெல்லாம் ஆசைப்படாதவராயிருந்தார்; பதவி வேட்டைக்காரர்களையும் பட்ட வேட்டைக்காரர்களையும் துரும்பென மதித்தார்; அதனால் அழுக்கற்ற தூய உடம்பு தாங்கியவரென மதிப்பிடற்குரியவரானார். இந்த நிலையே என் நண்பரை, **கப்பலோட்டிய தமிழன்** என்னும் கண்ணியப்பெயரை அடையும்படி செய்தது.

“இந்திரஜித்து எய்த பிர்மாஸ்திரத்தினால் கட்டுண்ட மாருதி, இராவணன் முன் தன்னைத் தானே விடுவித்துக் கொண்டதுபோல், நம்மை நாமும் பல பந்தங்களிலிருந்து விடுவித்துக் கொண்டு சுத்த வீரனாக வேண்டும்” என்று தமக்கு வீர ஆவேசம் வரும் போதெல்லாம் நண்பர் முழக்குவார்.

(“ஒருவருக்கு சுதந்தரம் கொடுக்கும் அதிகாரம் மற்றவருக்குக் கிடையாது. கட்டிக்கொடுத்த சோற்றைப்போல் பிறரொருவர் ஏற்பாடு செய்துகொடுத்த சுதந்தரங்கள் நீண்டகாலம் நிலைத்திரா.”)

தேசியகவி-பாரதியார்.


எல்லா
நோவுகளையும்
தீர்க்கும்
அமிர்தாஞ்சனம்
உத்தமம்
பாரத மணி.

நண்பா! போய் ஸிரோலின் 'ரோச்' சாப்பிடு.
இப்பொழுதே ஸிரோலின் 'ரோச்' சாப்பிட்டு இருமல் அல்லது ஜலதோஷத்தை ஒழியுங்கள்
ஸிரோலின் 'ரோச்'
இருமலையும் ஜலதோஷத்தையும் ஒழிக்கிறது

இவ்வாறு தம்மைப் பந்தத்தினின்றும் விடுவித்துக் கொண்டவரானபடியால், இந்த உண்மைத் தேசபக்தர், **கைவிலங்கு, கால்விலங்கு, சிறைவாசம், தடையுத்தரவு** ஆகிய இவைபோன்ற பூதங்கள் விழுங்கக் காத்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில்—துணிவாய், **சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பனி** என்ற பெயரில் நீராவிக் கப்பலை ஓட்டினார். இது தமிழ்நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் தலைநிமிர்ந்து நடக்கும் தகைமையைக் கொடுத்துவிட்டது.

அந்தக் கப்பல் தூத்துக்குடியிலிருந்து வங்காளக்குடாக்கடலில் உலாவத் தலைப்பட்டது. அது கண்ட தேசபக்தர்களின் உள்ளத்தில், மைந்தரின் வீர இயக்கம் கண்ட வீரத்தாயின் மனத்தில் எழும் குதூகலம் வளர்ந்து தாண்டவமாடியது. ஆனால் இந்த வீரத் தமிழனின் செயல் கண்டு பூதங்கள் சும்மா இருந்துவிடவில்லை. வீரத் தமிழனை விழுங்கிவிட்டன. பிறகு தங்கள் குகையாகிய சிறைச்சாலையிலே கக்கி, அங்கே கேழ்வரகுக் களிபோட்டு வளர்ந்து, ஆறு வருஷகாலம் செக்கிழுத்தல் முதலிய பல வேலைகளைச் செய்யும்படி வைத்துப் பிறகு வெளியே அனுப்பிவிட்டன.

கப்பலோட்டிய தமிழன் பேரிடர்களிலே அகப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், தன்மயமாக்கி எல்லோரையும் தியாக புத்தியில் எல்லா நன்மைகளையும் அடையும்படி செய்ய வல்ல **அன்பையே** தமக்கு அதிஷ்டமான தெய்வமாகக் கொண்டு சிறைச்சாலையிலே கடுந்தவம் புரிந்து மீண்டார். பிர்மா விஷ்ணு ருத்ரர்களைக் குறித்துத் தவம் புரிந்திருந்தால் ஏதேனும் வரம் பெற்று, பிரஹ்லாதன், அர்ஜுனன் முதலியவர்களைப்போல் மீண்டிருப்பார். அந்த வரம் இந்த அன்புத் தெய்வம் தரவில்லை, நம் நண்பரும் அத்தகைய வரங்களை விரும்பவில்லை. அன்புத் தெய்வம் தன்னை நோக்கித் தவம் புரிந்த இவரைத் தன் மயமாக்கியது; தியாகபுத்தியில் உறுதியைக் கொடுத்தது; சமரஸ பாவனையை அளித்தது. அந்த பலங்கொண்ட கப்பலோட்டிய தமிழன் பலரை அந்த உயரிய அன்பில் ஈடுபடுத்தி, நலம்பெற வைப்பதைத் தொழிலாகக் கொண்டார்.

கப்பலோட்டிய தமிழன் விடுதலை அடைந்தபின் சென்னைமா நகரத்தில்—பிரம்பூரில் வனவாசம் செய்தார். அஞ்சா நெஞ்சம் படைத்த வீரானதினால், பாண்டவரில் பீமசேனனைப் போல் வனவாசத்தைக் கடப்பதில் களைப்படையாதிருந்தார்.

இவர் வனவாசம் செய்கிற காலத்தில் ஏழைகள் பலர் இவரிடம் பரிவு பாராட்டி தம்மாலியன்ற உதவி புரிய முன் வந்தனர். அடிமை வாழ்க்கையில் ஆனந்த பரிதராய்த் தம்மையே மறந்த நிலையில் உலாவிய தனவந்தர், உதவி புரியச் சமயமும் சௌகர்யமும் பாத்திரமும் கிடைக்கப் பெற்றும், கவனித்தாரில்லை.

பிரம்பூர் நெருக்கடி மிகுந்த நகரத்திலிருந்து ஒதுங்கியுள்ள பிரதேசம். அங்கே கப்பலோட்டிய தமிழன் வசித்த வீடு, இச்சென்னை நகருக்கே வடக்குக் கோடி எல்லையாக அமைந்த—அதாவது, அதற்கப்பால் வீடுகளே இல்லாத வயல் வெளியில் ஓர் சோலைப்புறத்தில் உள்ளது; எல்லைச் சுவராவது வேலியாவதில்லாத மிகச்சிறிய வீடு. ஆனால் சுத்தமான காற்று உலாவக்கூடிய வசதிகள் அமையப்பெற்றது. கப்பலோட்டிய தமிழன் அதிற் குடிபுகுந்ததும், அது மகரிஷிகளின் ஆச்ரமமாக விளங்கியது. அதற்குமுன் அந்த வீட்டைப் பிசாசு குடிகொண்டதெனக் கருதி, அவ்வூரினர் நெருங்காதிருந்தனர்.

கப்பலோட்டிய தமிழன்-நீதி மார்க்கத்தில் விருப்பங்கொண்டவர்; நீதியையே தெய்வமாகப் போற்றுகிறவர்; ஆதலால் தமிழ் வேதம் என்று போற்றப்படும் திருக்குறள் என்னும் நூலைத்

தம் மாணவர்களுக்குச் சொல்லி வைப்பதில் உற்சாகமுடையவராயிருந்தார்.

பிரம்பூரில் அக்காலத்தில் தமிழ் வித்வான்கள் சிலர் வசித்து வந்தனர். அவர்களில்—**செல்வ கேசவராய முதலியார்** என்னும் பெரியார் ஒருவர். இவர் என்னிடம் அன்பு பூண்ட நண்பர். ஆங்கிலத்தில் எம். ஏ., பரீட்சையில் தேறிய தமிழறிஞர். இவர் தமிழில் பல நூல்களெழுதியுள்ளார். இவருக்கும் கப்பலோட்டிய தமிழருக்கும் இக்காலத்தில் நேசப்பான்மை செழித்து நின்று பல விதத்தில் அவர்களுக்கு ஆறுதலளித்தது.

இவ்வாறாக கப்பலோட்டிய தமிழனுக்கு—பிரம்பூர்ச் சிறிய வீடு பெரும் மானந்தம் தரக்கூடிய மாளிகையாக விளங்கியது. இந்தச் சிறு வீட்டில் கப்பலோட்டிய தமிழனைத் தனிப்படச் சந்தித்துப் பேசச் சமயமே அகப்படாது. எப்போதும் எவரேனும் சிலர் வந்து கூடிப் பேசியபடியேயிருப்பார். பிரம்பூர் நம் நண்பருக்கு வாழ்க்கைக்குரிய வசதியளிப்பதாயில்லாமற் போகவே நண்பர் ஒரு வருஷத்துக்கெல்லாம் தூத்துக்குடி சென்றார். அப்பால் நண்பரைக்காண முடியாமற் போயிற்று. அவ்வாறு ஏழு வருஷ காலம் கழிந்தது. அப்பால் ஒரு சமயம் நான் தனுஷ்



வேண்டுமென்றே
உங்களை
அவர்கள்
குறிபார்க்கவில்லை



ஆனால் அவதிப்படும் துர்பாக்கியசாலிகளில் ஒருவராக நீங்கள் ஆகலாம். தலைவிதி அப்படி இருந்தால், நீங்கள் அந்தக் கொடுமைக்கு ஆளாவதிலிருந்து தப்ப முடியாது! ஆனால் நீங்கள் **இன்ஷூரன்ஸ்** மூலம் உங்கள் குடும்பத்தை காப்பாற்றிவிட முடியும்.

விவரங்களுக்கு எழுதுக:

நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,
7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.
மதராஸ் பிராஞ்சு: **362, சைனா பஜார் ரோடு, சென்னை.**

கோடிக்குப் பிரயாணம் போகையில், மதுரை ஸ்டேஷனில் என்னை அவர் காண நேர்ந்தது. பார்த்தும், "பாரதி, எங்கே இந்தச்சிமைக்கு வந்துவிட்டாய்?" என்று கேட்டுக்கொண்டே என்னைத் தழுவிக் கொள்ள ஆவலுடையவரானர்.

நான், "கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டாற் போலாயிற்று! நல்ல காலம்" என்று சொல்லிக்கொண்டே இறங்கினேன். அப்பால்—ஸ்நேக வாஞ்சையுடன் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து பிரிகையில், "தங்கள் புத்தகம் விற்பனையான வகையில் இருபது ரூபாய் தருகிறேன். வைத்துக் கொள்ளுங்கள்" என்று ரூபா இருபது தந்தேன். அவர், "பாரதி, இந்த ரூபா இருபதும் இருபது நூறு" என்று கை குவித்தார்; "இந்தா இவைகளைச் சமயம் வந்தபோது உன்னுடைய **பால விநோதினி**யில் பிரசுரம் செய்" என்று மூன்று விஷயங்களடங்கிய ஒரு காகிதப் பையைக் கொடுத்தார். அதை நான் **'பாக்கியர்! இது எனக்கு இருபதாயிரம்'** என்று பெற்றுக்கொண்டேன். அதற்கு மேல் தாமதிக்கப் புகை வண்டி இடந் தரவில்லை.

இப்போதெல்லாம் இவரை நான் **வ. உ. சிதம்பரம்பிள்ளை** என்றே அறிவேன். அப்பால் 1934-ம் வருஷம் இவர் எனக்கெழுதிய கடிதத்தின் மூலமாகத்தான்—**கப்பலோட்டிய தமிழன்** என்கிற பேர் இவருக்குண்டென்பதை அறியலானேன்.

அறிவிப்பு.

சந்தாதாரர்கள் விலாச மாற்றங்களை அவ்வப்போது பாரதமணி காரியாலயத்திற்கு அறிவித்துவிடக் கோருகிறோம்.

மானேஜர்.

நம்மிடம் கிடைக்கும் தமிழ் நன்நூல்கள்.

1. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம் ரூ. 1

ஸ்ரீமத் ஆதிசங்கர ஸ்ரீபகவத் பாதர்கள் அருளிய பாஷ்யத்திற் தமிழ் அனுவாதம் ஸ்ரீ வே. நாராயணன், M.A., M.L., அவர்கள் செய்தது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்களின் திவ்ய ஸ்ரீமுகமும், மஹாமஹோபாத்யாய ப்ரொபஸர் ஸ்ரீ S. குப்புஸாமி சாஸ்திரிகள் அவர்கள் முகவுரையுடனுங் கூடியது.

2. ஸ்ரீ பஜ கோவிந்தம் ... ... அ. 2

ஸ்ரீமத் ஆதிசங்கர ஸ்ரீ பகவத் பாதர்கள் அருளிய கிரந்தமும் ஸ்ரீ A. S. நடராஜய்யர், B.A., M.L., அவர்கள் செய்த தமிழ் அனுவாதமும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது.

3. ஸ்ரீ ப்ரச்நோத்தர ரத்ந மாலிகா ... அ. 2

ஸ்ரீமத் ஆதிசங்கர ஸ்ரீ பகவத் பாதர்கள் இயற்றியதை ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் தமிழில் உபதேசித்தது.

4. ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அருளிய நன்மொழிகள் முதற் புத்தகம் ... .. ரூ. 1-8

5. ,, இரண்டாம் புத்தகம் ... அ. 10

6. ஸ்ரீ உபாஸனி விஜயம் அ. 6

ஸ்ரீமதி எஸ். ராஜம் எழுதியது.

7. யோகம் செய்ய வேண்டுமா? ... ரூ. 1

ஸ்ரீ பி. கோதண்டராமன் எழுதியது.

8. அரவிந்தரும் அவரது யோகமும் ... அ. 10

ஸ்ரீ பி. கோதண்டராமன் எழுதியது.

பி. ஜி. பால் அண்டு கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
ஆள்வார்பேட் : : சென்னை.

குழந்தைகளுக்கு
ஆரோக்யம்
அளிக்கிறது

ஏதோ ஒருவித மாறுபாட்டுடன், சிடுமூஞ்சித்தனம்பண்ணி, எவ்வித காரணமும் வெளிப்படையாக இல்லாமல், குழந்தை ஓலமிட்டழுதால், அதற்கு ஜீரண சக்திக் கோளாற்றினால் ஏற்பட்ட தாங்கொணாத வலியே காரணமாக இருக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிரைப் சிரப் ஐ. டி. எல். உடனடியான சிகிச்சைசெய்வதோடு, மேற்கொண்டு விருத்தியாகக் கூடிய பெரும் இன்னல்களையும் வராமல் தடுக்கிறது. கைவசம் எப்போதும் ஒரு பாட்டிலே வைத்திருங்கள்.

கிரைப் சீரப்

ஏஜண்டுகள்:– மெஸர்ஸ் பேஸ்டு அண்டு கோ., லிமிடெட்,
தபால் பெட்டி 63, மதராஸ்.

நதியில் கலந்த தத்துவம்

ஸ்ரீ. ஸேதுராமன்

அம்மா காவேரி, யாரும் அறியாத மகா பரிசுத்தமான இடத்தில் பிறந்தாய் நீ.... பிறக்கும்போது உனக்குத் துணையாக யாரும் இல்லை. பாறைகளும், மலையில் வாழும் பட்சிகளுந்தான் உன் குழந்தை அழகை அநுபவிக்கின்றன.

சின்னஞ்சிறு குழந்தை நீ, பிறந்தவுடன் எவ்வளவு கஷ்டங்களுக்கு ஆளாகிறாய்! பாறைகளில் இங்குமங்கும் எத்தனை தடவைதான் அலைந்து மோதிக்கொள்வாய்? பாவம், உனக்கு நல்ல பாதை வெட்டி, வழிகாட்ட யார் இருக்கிறார்கள்! தன்னந்தனியே ஊழ்வினையை எண்ணி, ஈசன் இழுத்த இழுப்புக்கெல்லாம் பொறுமையுடன் செல்வோம் என்றுதானே நீ பயப்படாமல் வெளிக்கிளம்பினாய்!........ நினைத்தால் நீ சுகமாக இருக்கலாமே. பிறந்த இடத்திலேயே சுற்றிச் சுற்றி வளைந்த மலைகளின் அழகையும் அங்கெல்லாமுள்ள அடவிகளில் வாழும் புள்ளினங்களின் இன்ப கீதங்களையும் கேட்டுக்கொண்டே பிரும்மானந்தமாக வாழலாமே.... பேதை நீ!

இல்லை இல்லை, நீ தெய்வமல்லவா! மனிதப் பிறவியாக இருந்தாலன்றோ சொந்த இன்பத்தையே நாடிச் சுகித்திருப்பாய்! நன்றிகெட்ட மனிதனுக்கு உணவூட்ட நீ புறப்பட்டவள். பதிலுக்கு அவன் கழுநீரையும், மலஜலத்தையும் உன்மீது கொட்டுகிறான்!........ மடியில் கதகதப்புடன் கவலையற்றுத் துயிலும் சிசுவின் அசுத்தங்களைத் தாய் அருவருப்பின்றி ஏற்று மகிழ்வதுபோல, நீயும் அவற்றைச் சகிக்கிறாய். எங்களிடம் உள்ள அன்பு அதிகரித்து அதன் அறிகுறியாக, போகப் போக நீ ரமணீயமாகவும், சாந்தமாகவும் செல்கிறாய்.

குழந்தையாக இருக்கையில் நீ பயமற்றவள். உன் இஷ்டப்படி பாம்பைப்போல வளைந்த சிறு கற்பாறைகளில் இடித்தும் மோதியும் ஆவேசத்தோடு வருகிறாய்—எங்களைக் காப்பாற்ற விரைந்து ஓடோடி வருவதே போல. அப்போது உன்னை யாரும் அண்டமுடியாது, அடக்கவும் முடியாது.

அசரத்திலும் அடவியிலும் பொறுக்கி எங்களுக்குக் கொடுக்க நீ ஆவலோடு எடுத்துவரும் செழுமையை உன்னை வழிமறித்துப் பிடுங்கிக்கொள்ள அணைபோட்டு மடக்குகிறார்கள். அதையும் சமாளித்துக்கொண்டு வருகிறாய். என்னே உன் கருணை! எங்களிடம் உனக்கு எவ்வளவு பாசம்!

நீ திரட்டிவந்த செழுஞ் செல்வத்தை நாங்கள் அள்ளிச் செல்கிறோம். வயிறுநிரப்ப உண்டு களிக்கிறோம்........ நீ பிரவஹிக்கும் படுகை ஆபாசப்படுவது தான் உன் கருணைக்குப் பலர் செய்யும் கைம்மாறு!

பிறக்கும்போது தனியே பிறந்தாய். கடலில் கலக்கும்போதும், முன் சொன்னதுபோல, பரிசுத்தமானப் மனிதவாடையற்ற, அமைதியான இடத்தில் குழந்தைபோலச் சிறிய உருவுடன் கவலையற்று ஆனந்தமாகச் செல்கிறாய். இடிபட்டு மோதி வழிகாணத் தவித்த நீ, சங்கமத்தில் நிம்மதியாக இருக்கிறாய். சிறுவன் நான், வாழ்க்கைப் பாறைகளில் வழுக்கி விழுந்து பலவாறு மோதப்படுகிறேன்...... உன்னைப்போல அந்திம காலத்திலாவது சாந்தியும் சந்துஷ்டியும் நான் பெறுவேன் என்ற நம்பிக்கையை நீ எனக்கு உணர்த்துகிறாய்.

உன் நீரில் கலந்தோடும் இந்தத் தத்துவம் என் நினைவிலிருக்க அருள்புரி. துன்பங்களை யெல்லாம் மறக்க அது பயன்படும்!

Edited & Published by K S Venkataramani at No 43 Mahadana Street Mayavaram, printed by V. Ramamurthi B. A., at the Mirasdar's Welfare Press 29, Mahadana Street, Mayavaram.